பக்கங்கள்: பதினான்கு

a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 24 திங்கட்கிழமை (07-05-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:162

# யுத்தத்தை நிறுத்துவதற்கு படைத்தரப்பு முழு ஆதரவு!

## ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

கொழும்பு,மே7

**ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்கு சண்டையை நிறுத்தும் யோசனைக்கு தேசிய பாதுகாப்புக்குழு ஆதரவு தெரிவித்திருக்கின்றது.**

**கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற பாதுகாப்புக்குழுக் கூட்டத்தில் ஏகமனதான இந்த ஆதரவு குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் தெரிவிக்கப்பட்டது.**

பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றார். இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:-

தேசிய பாதுகாப்புத் தொடர்பான மற்றொரு கூட்டத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வெள்ளி பிற்பகல் கூட்டியிருந்தார். இம்முறை தோல்வியில் முடிந்த 'அக்கினிச்சுவாலை' நடவடிக்கையின் பின்னர் எழுந்துள்ள விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. ஒரு குறிக்கப்பட்ட காலவரையறைக்கு சண்டையை நிறுத்துவது தொடர்பாக பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரிகள் மற்றும் ஏனைய பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகளின் கருத்தை ஜனாதிபதி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்' முகாமையாளர் விபத்தில் அகால மரணம்



யாழ்ப்பாணம்,மே7

உதயன் வெளியீட்டு நிறுவனத்தின் சிரேஷ்ட நிர்வாக அதிகாரிகளில் ஒருவரான கனகையா நந்தகுமார் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நண்பகல் விபத்தொன்றில் அகால மரணமானார் என்ற செய்தியை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகிறோம்.

நேற்று நண்பகல் பலாலி வீதி - நாவலர் வீதிச்சந்தியில் இடம்பெற்ற இராணுவ வாகன - மோட்டார் சைக்கிள் விபத்தில் இவர் கொல்லப்பட்டார்.

56 வயதான க.நந்தகுமார் தமது கல்லூரிக்கல்வியை முடித்துக் கொண்ட பின்னர் ஒரு பத்திரிகையாளராகப் பணியை ஆரம்பித்தார். சுமார் எட்டு வருடங்கள் வீரகேசரிப் பத்திரிகையில் அலுவலகச் செய்தியாளராகச் சேவை புரிந்தார்.

அப்போதே, லண்டன் சர்வதேச கணக்காளர் நிறுவனத்தில் (ஏ.ஐ.ஏ.)

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணியில் சிக்கி படை அதிகாரி காயம்

கொழும்பு,மே7

முகமாலைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை ஆள்களுக்கு எதிரான கண்ணியில் சிக்கி படை அதிகாரி ஒருவர் காயம் அடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

பொன்னார் பகுதியில் அதேதினம படையினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார் என தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (க-3)

## மாமடுமுகாம் சிப்பாய் கைது

வவுனியா,மே7

கொழும்பில் சுங்க அதிகாரி சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக வவுனியா மாமடு முகாமில் பணிபுரியும் சிப்பாய் ஒருவர் நேற்றுக்கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹாவில் இருந்து வந்த விசேட பொலீஸ் குழுவே இந்தச் சிப்பாயைக் கைது செய்துள்ளது.

பிரஸ்தாப சிப்பாய் சம்பவதினம் விடுமுறையில் சென்று மறுநாள் வேலைக்குத் திரும்பியிருந்தார் என்றும் -

அவரது நடமாட்டம் குறித்து விசாரணை நடத்திய பொலீஸார் சந்தேகத்தின் பேரில் அவரைக் கைது செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப சிப்பாய் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (க-3)

## வெசாக் பண்டிகையை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்புத் தீவிரம்

கொழும்பு,மே7

வெசாக் பண்டிகையை முன்னிட்டு கொழும்பு நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நகரில் மேலதிகமாக பொலீஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பண்டிகைக் காலங்களில் விடுதலைப் புலிகள் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்பதனாலேயே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்று சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இந்த நாள்களில் பொதுமக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வெளிச்சக்கூடு போட்டிகள் நடைபெறும் இடங்கள், பக்திப் பாடல்கள் இசைக்கப்படும் ஸ்தலங்கள் போன்றவற்றில் விசேட பொலீஸ் குழுக்கள் கடமையிலீடுபடுத்தப்பட்டுள்ளன. (க-5)

## மாவனல்லவுக்கு பௌஸி, அலவி நேற்று விஜயம்

கொழும்பு,மே7

சிங்கள - முஸ்லிம் கலவரம் இடம்பெற்ற மாவனல்ல பகுதிக்கு அமைச்சர்கள் ஏ.எச்.எம்.பௌஸி, அலவி மௌலானா ஆகியோர் நேற்று நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்தனர்.

இந்தப் பகுதியில் சிங்கள - முஸ்லிம் பிரமுகர்களை உள்ளடக்கிய சமாதானக் குழு அமைப்பது பற்றி அவர்கள் அங்கு ஆலோசனை வழங்கினார்கள். (க-5)

## முறுகல் நிலைக்கு மத்தியில் இன்று ஜனாதிபதியைச் சந்திக்கிறது முஸ்லிம் காங்கிரஸின் குழு!

கொழும்பு,மே7

மாவனல்லவில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களை அடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் அரசுக்கும் இடையில் முறுகல் நிலை உருவாகியுள்ள இவ்வேளையில் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை முஸ்லிம் காங்கிரஸ் தூதுக் குழு இன்று சந்திக்கவிருக்கின்றது.

மாவனல்லவில் இடம்பெற்ற அசம்பாவிதங்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யாத அரசு, மருதானையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து தடுத்து வைத்தது நியாயமா என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

அத்துடன் மாவனல்லவில் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நஷ்டஈடு வழங்க அரசு தவறிவிட்டது என்றும் முஸ்லிம் காங்கிரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது. (க-3)

## புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் அதிபர்கள் மீது கடும் நடவடிக்கை

### மட்டு. இராணுவ அதிகாரி எச்சரிக்கை

மட்டக்களப்பு,மே7

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பாடசாலை அதிபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவ அதிகாரி எச்சரிக்கை செய்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பிலுள்ள பாடசாலை அதிபர்கள் அனைவரும் இங்குள்ள 23 ஆவது படைப் பிரிவுத் தலைமையகத்திற்கு அழைக்கப்பட்டு இவ்வாறு எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

ஆசிரியர்களிடம் நிதி சேகரிப்பு போன்றவை உட்படப் பல்வேறு வகைகளில் புலிகளுக்கு உதவும் பாடசாலை அதிபர்கள் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று 23 ஆவது படைப் பிரிவு கட்டளை அதிகாரி கேணல் ட.ஆர்.எல்.அன்ரனிஸ் அதிபர்கள் முன்னிலையில் உரையாற்றும்போது கூறினார்.

பாடசாலை ஆசிரியர்களின் சம்பளத்தில் 8 வீதம் விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதாக சரணடைந்த அந்த இயக்கத்தின் போராளிகள் தெரிவித்துள்ளனர் என்றும் -

இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு மேற்பார்வை அலுவல்களுக்காகச் செல்வதற்கு மட்டுமே கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு அனுமதி அளிக்கப்படும் என்றும் -

இதனைச் சாட்டாக வைத்துக் கொண்டு புலிகளுடன் எந்தச் சந்திப்பும் நடத்தக் கூடாது என்றும் - அவர் தெரிவித்தார். (க-5-9)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கண்பரிசோதனை முகாம் நடத்தினார் ஜயலத் எம்.பி.!

கொழும்பு,மே7

வன்னியில் விடுதலைப் புலிகளின கட்டுப்பாட்டில் உள்ள மடுப்பகுதியில் நான்கு நாள்கள் தங்கி கண் பரிசோதனை முகாம்களை ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா நடத்தியுள்ளார்.

இரு வைத்தியர்கள் சகிதம் கடந்த புதன்கிழமை அங்கு சென்றிருந்த ஜயலத் நேற்றுக்காலை கொழும்பு திரும்பினார்.

அங்கு விடுதலைப் புலிகளின் உள்ளூர் தலைவர்களைத் தாம் சந்தித்ததாகவும் -

தமது மனிதாபிமானப்பணி குறித்து அவர்களிடம் பிரஸ்தாபித்ததாகவும்-

தமது பணிக்கு முழு ஆதரவைத் தருவதாக அவர்கள் உறுதி மொழி வழங்கியதாகவும் -

ஜயலத் உதயனுக்குத் தெரிவித்தார்.

அங்கு தங்கியிருந்த நேரத்தில் இரவு - பகல் என்று பணியாற்றி சுமார் அறுநூறுக்கு மேற்பட்டவர்களுக்குக் கண் பரிசோதனை நடத்தியதாகவும் - அவர் தெரிவித்தார்.

தச்சனார்மருதமடு முகாம், மடு தேவாலயம், மடு ஆஸ்பத்திரி ஆகிய இடங்களில் 150 மாணவர்களுக்கும் பரிசோதனை நடத்தியதாகவும் -

அவர்களில் பார்வை பாதிக்கப்பட்ட நூறு பேருக்குத் தாம் இலவசமாக கண்ணாடிகள் வழங்க இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 'அக்கினிச் சுவாலை'யால் சுடுகாடாகிய பளைப் பிரதேசம்

கொழும்பு,மே7

எழுதுமட்டுவாழ் பகுதியில் இருந்து அண்மையில் இராணுவத்தினர் மேற்கொண்ட அக்கினிச்சுவாலை நடவடிக்கையினால் பளைப் பிரதேசம் இப்போது சுடுகாடாகக் காட்சியளிக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

பல்குழல் எறிகணை, விமானக் குண்டு வீச்சு போன்றவற்றினால் இங்குள்ள கட்டடங்கள் யாவும் முற்றாக அழிந்து போயுள்ளன.

பளை மருத்துவமனை, உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகம், தபாலகம் போன்றவற்றின் கட்டடங்கள் மற்றும் ஏராளமான வீடுகள் சேதமடைந்துள்ளன.

விமானத்தில் இருந்து வீசப்பட்ட குண்டுகளினால் இங்குள்ள வீதிகள் மற்றும் தரிசு நிலங்களில் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன.

பளை நகரத்தின் மத்தியிலுள்ள சந்தைக் கட்டடம் மீது நடத்தப்பட்ட அகோரக் குண்டுத் தாக்குதல்களினால் பெரும் சேதமடைந்துள்ளதுடன் அருகிலுள்ள தென்னந் தோப்புகளும் அழிந்து நாசமாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. (க-5-6)

## 'தாயகம்' இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,மே7

ஆதரவற்ற சைவச் சிறுவர்களுக்கு வாழ்வளிக்கும் நோக்கோடு கோண்டாவில் பொற்பதி வீதியில் 'தாயகம்' சிறுவர் இல்லம் இன்று காலை 10.30 மணிக்குத் திறந்து வைக்கப்படுகின்றது.

சுமார் முப்பது சிறுவர், சிறுமியரோடு ஆரம்பித்து வைக்கப்படும் இந்த வாழ்வக அமைப்பு மேலும் 70 சிறுவர்களுக்கு இடமளிக்கும் வகையில் விரைவில் விஸ்தரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்றைய திறப்பு விழாவில் யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நல்லை ஆதன முதலவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், மல்லாகம் நீதிபதி பா.சுப்பிரமணிம், யாழ்.பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு, மல்லாகம் பதில் நீதிவான் க. அரியநாயகம், யாழ். மேலதிக அர

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கண்ணீர்ப் பூக்கள்



அண்ணனாய், நல்லாசானாய்,
சமூக சேவையாளராய்த் திகழ்ந்த

## நந்தன் அண்ணா

அவர்கள் அகாலமரணமாகிய செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆர்க் வீடியோ லைபிறறி,
அம்மன் றோட், யாழ்ப்பாணம்.

(C/16588)

# கண்ணீர் அஞ்சலி



அன்பாய், ஆதரவாய்
அரவணைப்பாயத் திகழ்ந்த

## நந்தன் அண்ணா

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த அதிர்ச்சி அடைந்தோம். அவரது இறப்பு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுப்பஸோ வீடியோ ஓடியோ அன் கலர் லாப்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/16589)

"கன்னித் தமிழ் வேர்களுக்குள் முத்தெடுப்போம்
காலம் தோறும் முத்தம் பதிப்போம்"

# யாழ். திருமறைக் கலாமன்றம்

மகிழ்வுடன் நடத்தும்

# தமிழ் விழா - 2001

நிகழ்ச்சிகள்

**மூன்றாம் நாள் 07-05-2001 திங்கட்கிழமை**

இடம்: மன்ற கலைத்தூது மணி மண்டபம்
நேரம்: மாலை 5.00 மணி.

கருத்தரங்கு ~ நாடகவியல்

பொருள்: பேர்த் தோல்ற் பிறெஃற் - ஒரு மீள் பார்வை
கருத்துரையாளர்: பேராசிரியர் நீ மரிய சேவியர் அடிகள்
தலைமை : திருமதி கோகிலா மகேந்திரன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)

இடம்: மன்ற அரங்கு நேரம்: மாலை 6.00 மணி

தலைமை : திருமதி கோகிலா மகேந்திரன்
சிறப்புரை : கலாநிதி. என்.சண்முகலிங்கன்
(தலைவர், அரசறிவியல் - சமூகவியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்)

"சிறுவர் இலக்கியம்"

கலை நிகழ்ச்சி: கூடித் துயர் வெல் (சிறுவர் நாடகம்)
(யாழ். திருமறைக் கலாமன்றம்)

**நான்காம் நாள் 08.05.2001 செவ்வாய்க்கிழமை**

இடம்: மன்ற கலைத்தூது மணி மண்டபம்
நேரம்: மாலை 5.00 மணி.

கருத்தரங்கு ~ இலக்கியம்

பொருள்: தேம்பாவணியில் பெண்கள்
கருத்துரையாளர் : பேராசிரியர் நீ மரிய சேவியர் அடிகள்
தலைமை : திரு.ஜோசப்பாலா
(செயலாளர், கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்)

இடம்: மன்ற அரங்கு நேரம்: மாலை 6.00 மணி

தலைமை : இசைத்தென்றல் ம.யேசுதாஸன்
சிறப்புரை : திரு.ஸ்ரீ தர்சனன்
(உதவி விரிவுரையாளர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

"இசையின் வளர்ச்சிப் போக்கில்
நவீன தொழில் நுட்பத்தின் பங்கு"

கலைநிகழ்ச்சிகள்:
☆ இசைக்கச்சேரி
செல்வி எஸ்.கணேஸ்வரி குழுவினர்
☆ இசை நிகழ்ச்சி
யாழ். திருமறைக் கலாமன்றம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 2393

திருமறைக்
கலாமன்றம்.

(C/16581)

# பிரேரணைகளுக்கு வாக்குத் தேடும் ஐ.தே.கட்சி

கொழும்பு,மே7

ஐ.தே.க. நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருக்கும் இரு பிரேரணைகளுக்கு ஆதரவாக வாக்குத் தேடும் முயற்சியில் பொ.ஐ.முன்னணி எம்.பி.க்களையும் நாடிவருகிறது. என்று கூறப்படுகிறது. உத்தியோக பூர்வமாகவும் மறைமுகமாகவும் அவர்களின் ஆதரவைக் கோருவோம் என்று நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் பிரதம நீதியரசருக்கெதிரான அரசியற் குற்றச் சாட்டுப் பிரேரணையையும் தயாரித்து வரும் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தமக்கு பொ.ஐ.முன்னணி எம்.பிக்கள் சிலரினதும் மூத்த அமைச்சர் ஒருவரினதும் உறுதிமொழிகள் கிடைத்துள்ளன என்று ஐ.தே. க.வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவு தமக்குண்டு என்று ஐ.தே.க. நம்பினாலும், தாம் இது தொடர்பாக இறுதியான முடிவு எதனையும் எடுக்கவில்லை என்று முன்னணியின் பிரசாரச் செயலாளரான விமல் வீரவன்ச தெரிவித்தார். (க)

# தாதியர் விடுதியை மீளக் கையளிக்க சம்மதம்

யாழ்ப்பாணம், மே7

இராணுவத்தினர் வசமிருக்கும் யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் விடுதிக் கட்டடம் வைத்தியசாலையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்த விடுதிக் கட்டடம் தொடர்பாக சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே மேற்படி கட்டடத்தை விடுவிப்பதற்கு படையினர் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் பல தாதிமார்கள் அமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்து தமது பிரச்சினைகள் தொடர்பாக விளக்கிக் கூறினார்கள்

அதனைத் தொடர்ந்து அமைச்சர் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (க-5)

# தாதியருக்கான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே7

யாழ்.போதனா வைத்தியசாலை புனித வேளாங்கண்ணி சிற்றாலயத்தோடு புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் 'சமூக உளநல ஆன்மீகப் பணியகத்தில் முதல் நிகழ்வாக (ஆரம்ப நிகழ்வாக) நாளை செவ்வாய்க்கிழமை தாதியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

காலை 10.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணி வரை நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் 'உள நெருக்கீட்டு முகாமைத்துவம்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு நடைபெறும்.

யாழ். ஆஸ்பத்திரியின் பிரதம தாதிய பரிபாலகர் நல்லதம்பி கனகரத்தினம் நெறிப்படுத்தும் இக் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் செல்வி நவமலர் கனகரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

இக்கருத்தரங்கைத் தொடர்ந்து இவ்வைத்தியசாலையில் பணிபுரியும் பல தரப்பட்ட பணியாளர்களுக்கும் இது போன்ற கருத்தரங்குகள் இப்பணியகத்தில் நடைபெறும் என சிற்றாலய ஆன்மகுரு செ.அன்புராசா தெரிவித்தார்.

(க-15)

# கோமாரி கப்பலில் குடாநாட்டு உற்பத்திப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,மே7

யாழ்.குடாநாட்டின் உற்பத்திப் பொருள்களான புகையிலை, வெங்காயம் மற்றும் பனம்பொருள்கள் பருத்தித்துறைத் துறைமுகத்தில் 'கோமாரி' கப்பலில் ஏற்றப்பட்டு வருகின்றன.

கப்பல் நேற்றுப் புறப்படவிருந்தது.

(க-10)

# கண்ணீர்ப் பூக்கள்



நேற்றைய தினம் (06.05.2001)
அகால மரணமடைந்த
உதயன் நிறுவன முகாமையாளரும்
யாழ்.றோட்டரிக்கழக உறுப்பினருமான

## Rtn. க.நந்தகுமார்

அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

சுன்னாகம
றோட்டரக்ட் கழகம்.

(C/16584)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் க.நந்தகுமார்

எமது சங்கத்தின் நீண்ட கால உறுப்பினரும்,
முன்னாள் தலைவரும், முன்னாள்
செயலாளருமான

## அமரர் க.நந்தகுமார்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம்.

அமரருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர்,
செயலாளர்,
உறுப்பினர்கள்.

யாழ்ப்பாணகிரிக்கெட்
மத்தியஸ்தர்கள் சங்கம்.

(C/16585)

# கண்ணீர் அஞ்சலி



அன்பாய், ஆதரவாய்,
வழிகாட்டியாய்த் திகழ்ந்த

## நந்தன் அண்ணா

அவர்கள் 06.05.2001 இல் அகால மரணமாகிய செய்தி அறிந்து வருந்துகின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு நாம் ஆறுதலைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அல்டி,
75, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C/16586)

# CONGRATULATIONS

Best wishes on the completion of 5th year for **IIS** the Information technology field in Jaffna.

**Agricultural Students Union**
*University of Jaffna.*

(87520)

# குருமணிகள் வாழ்க

**அருட்பணி எயின்சிலிறொஷான்**
**அருட்பணி றோய் பேடினன்**
**அருட்பணி அலெக்சிஸ் அருட்செல்வன்**

அர்ப்பண வாழ்வின் அழைப்பினையுணர்ந்து - இறை
அர்த்தம் நிறைந்த சேவைகள் தொடர
அமலனருள் ஆசி வேண்டி
அகம் மலர்ந்து வாழ்த்துகிறோம்.

*பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

யோசப் பாலா குடும்பம்,
ஜெறோம் குடும்பம் .

(87517)

# அவசர கலந்துரையாடல்

ஜி.சீ.ஈ உயர்தரப்புள்ளிகள் அடிப்படையில் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையிலே தோற்றி இதுவரை நியமனம் கிடைக்காதவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை (08.05.2001) செவ்வாய் காலை 10.00 (மு.நே.) மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. எனவே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி இதுவரை நியமனம் கிடைக்காதவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*குறிப்பு:- நேரத்தைக் கருத்தில் கொண்டு குறித்த நேரத்தில் சமுகம் தரவும்.*

சு.மணிராசா,
தலைவர்.

இ.சசிக்குமார்,
செயலாளர்.

(87514)

# உதயன்

## இனமோதல்களைத் தடுக்க....

நாட்டில் இனக்கலவரம் நடைபெறுவதற்குத் தமது அரசாங்கம் அனுமதிக்காது என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார். மாவனல்லவில் நடைபெற்ற சிங்கள — முஸ்லிம் மோதலைச் சுட்டிக்காட்டியே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிக் காலத்தில் இனக்கலவரங்கள் மட்டுமன்றி ஜனதா விமுக்திப் பெரமுனவின் கலவரமும் நடைபெற்றதை அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மாவனல்லக் கலவரம், கொழும்பு மற்றும் அம்பாறையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள் என்பனவற்றின் பின்னணியில் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியே நின்றது என்ற தொனியிலேயே ஜனாதிபதியின் உரை அமைந்திருக்கிறது.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முழுமூச்சில் செயற்பட முனைந்துள்ளதால்— அது குறித்து வெளிப்படையாகவே தெரிவித்துள்ளதால் — ஆளுந்தரப்பு இத்தகைய குற்றச்சாட்டுக்களை சுமத்துவது ஒன்றும் புதுமையானதல்ல; புதினமானதும் அல்ல.

அரசைக் கவிழ்க்கும் எண்ணமே இல்லாமல் எதிர்க்கட்சி நல்லெண்ண மனப்பாங்குடன் செயற்படினும் கூட, அரசியல் லாபம் தேடும் நோக்குடன் ஆளுந்தரப்பு இத்தகைய சம்பவங்களுக்கு எதிர்த்தரப்பு மீது சுட்டுவிரலை நீட்டுவது இயல்பு— ஒருவகையான அரசியல் ''மரபும்'' கூட!

ஜனாதிபதி சந்திரிகா பதவிக்கு வந்த பின்னர், வடக்கு-கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள் மூளக்கூடிய பல சந்தர்ப்பங்கள் உருவாகின என்பதும் —

அரசாங்கம் அவ்வாறு எதுவும் நடைபெறாமல் தடுத்தது என்பதும் உண்மையே. அதற்காக அரசு வன்முறைகளை ஏறெடுத்துப் பார்ப்பதில்லை என்பது அர்த்தமல்ல.

அரசாங்கத்தின் நாடாளுமன்ற வாக்குப் பலத்துக்காக சந்திரிகா நம்பியிருக்கும் பிரதான கட்சிகளில் தேசிய ஐக்கிய முன்னணியும் ஒன்று அக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம், மாவனெல்லக் கலவரங்களுக்கு அரசாங்கமே பொறுப்பேற்கவேண்டும் என்று கூறியிருக்கிறார்!

இத்தகைய சம்பவங்களுக்கு அரச தரப்பினர் வெறுமனே கவலை தெரிவித்துவிட்டு எதிர்க்கட்சிகள் மீது குற்றஞ்சாட்டுவதோடு தமது பொறுப்பு நீங்கிவிட்டதென்றுநினைக்கலாகாது.

இந்த நாட்டில் இனக்கலவரங்கள் நடைபெறாமல் இருக்க வேண்டுமாயின், இனங்களுக்கு இடையே நிரந்தர சமாதானம் உருவாக்கப்படவேண்டும்; உருவாகவேண்டும். இந்த நாட்டில் வாழும் சகல இன மக்களுக்கும் சமத்துவமான உரிமைகள் வழங்கப்படுவது மிகவும் அவசியம். தங்களுக்குரிய அரசியல், பொருளாதார, சமூக, வாழ்வியல் உரிமைகள் கிடைத்துள்ளதாக அவர்கள் உணரும் விதத்தில் மாற்றங்கள் வரவேண்டும்.

ஒரு சாராருக்கு மேலதிக உரிமைகளும் சலுகைகளும் ஒரு புறமும், மறுசாராருக்கு பாகுபாடும் புறக்கணிப்பும் மறுபுறமும் என்ற நிலைமையறவே நீக்கப்படவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு ஒன்று காணப்பட்டாலே நிரந்தர சமாதானத்தை அடைய முடியும். அதற்கான முயற்சிகளைக் கடத்திக்கொண்டு இனநல்லுறவை எவ்வாறு உண்டாக்க இயலும்?

# மதுவினால் ஏற்படும் சீரழிவு; தடுக்க விழிப்புணர்வுக் குழு

## பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், மே 7

குடாநாட்டுச் சமூகத்தை சீரழித்து வரும் மதுபாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் ''சமுதாய விழிப்புணர்வு ஆலோசனைக் குழு'' ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் நீதிபதிகள், அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர்கள், மருத்துவர்கள், விரிவுரையாளர்கள், மதுவரித் திணைக்கள அதிகாரிகள், மதகுருமார் பத்திரிகையாளர்கள், சமூகவியலாளர்கள், மாணவப் பிரதிநிதிகள், அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இந்தக் கூட்டத்தில் அமைக்கப்படவுள்ள சமுதாய விழிப்புணர்வு ஆலோசனைக் குழு சீரழிந்து போயுள்ள குடாநாட்டு இளைய தலைமுறையை வழிப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடும் என்று பல்கலைக்கழகப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இந்த முயற்சிக்கு அனைத்துத் தரப்பினரும் தமது பூரண ஆதரவை வழங்க வேண்டும் எனவும் பல்கலைக்கழக சமூகம் கேட்டிருக்கிறது. (ஐ-6-4)

## ஆலய வீதிகள் திருத்தம்

யாழ்ப்பாணம், மே 7

சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய சுற்றாடலில் உள்ள வீதிகள் திருத்தப்பட்டு வருகின்றன.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள உற்சவத்தை ஒட்டி வீதிகள் திருத்தப்பட்டு ஆலயச் சூழல் செப்பனிடப்பட்டுவருவதாக வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் தெரிவித்தார். (ஐ)

## அருட்சகோதரர்கள் மூவர் இன்று திருநிலைப்படுத்தப்படுவர்

யாழ்ப்பாணம், மே. 7

யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த மூன்று அருட்சகோதரர்கள் யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்தால் இன்று காலை 9 30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் வைத்து குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

நவாலி புனித பேதுருவானவர் ஆலய பங்கைச் சேர்ந்த அருட்சகோதரன் சிலுவைராசா அலெக்சிஸ், அருட்செல்வன் நவாலி திருச்சபையின் முதலாவது அருட்தந்தையாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

கரம்பொன் புனித செபஸ்ரியார் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரன் செபஸ்ரியன் றோய் பேடினன் கரம்பொன் திருச்சபையின் புதிய குருவாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி ஆலய பங்கைச் சேர்ந்த அருட் சகோதரன் செபஸ்ரியாம்பிள்ளை எயின்சிலிறொஷான் ஆனைக்கோட்டைத் திருச்சபையின் முதலாவது குருவாகத் திருநிலைப்படுத்தப் படவுள்ளார்.

இதேவேளை—

வயாவிளான் புனித உத்தரிய மாதா ஆலய பங்கைச் சேர்ந்த அருட்சகோதரன் யோசப் அருள்நாயகம் யோசப் ஜெயசீலன் எதிர்வரும் 26ஆம் திகதி புதுக்குடியிருப்பு சூசையப்பர் ஆலயத்தில் ஆயர் அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார்

இந்த நான்கு அருட்சகோதரர்களும் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி ஆயர் அவர்களால் திருத்தொண்டர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டிருந்தனர். (ஜ-6)

## நிகழ்ச்சிகள் ஒத்தி வைப்பு

தேசிய கல்வி நிறுவனத்தின் யாழ் இந்துக் கல்லூரி நிலைய முதலாம் வருட கல்வி டிப்ளோமா ஆசிரிய மாணவர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

முன்னர் அறிவிக்கப்பட்டபடி 12ஆம் திகதி இச்செயலமர்வு நடைபெறமாட்டாது என்று சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த. வில்வநாதன் தெரிவித்துள்ளார்.

* * *

கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தினால் இன்று நடத்தப்படவிருந்த கலை நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ-5)

## இசை விழாவில் இன்று

இனங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த இசை விழாவில் நான்காவது நாளான இன்று காலையும் மாலையும் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன

காலை நிகழ்ச்சிகளில் சுந்தரம் தையல்நாயகியின் மங்கள இசை, ஷர்மிளா ரதிதரனின் புல்லாங்குழல் இசை, கே. பத்மநாதனின் வயலின் இசை, பொன். ஸ்ரீவாமதேவனின் இசைக்கச்சேரி ஆகியனவும்—

மாலை நிகழ்ச்சிகளில் எஸ். கே. உதயநாதனின் மங்கள இசை, ஆர். ராதாகிருஷ்ணன், சைந்தவி ராதாகிருஷ்ணன், சுஜாத்தா தேவராசா ஆகியோரின் வயலினிசை, ஸ்ரீ மோகனா பாலசுப்ரமணியத்தின் பரத நாட்டியம் ஆகியனவும்— இடம்பெறவுள்ளன. (ஐ-8)

## வணிகர் கழகம் அமைச்சருடனான சந்திப்பு 11 இல்

நுணாவில், மட்டுவில், சரசாலை வணிகர் கழகப் பிரதிநிதிகள் நாளை செவ்வாய்க்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் நடத்த விருந்த சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பு 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (க-5)

## தேரேறி வந்தே போரோயச் செய்வீர்!

தொல்வினை தீர்த்தருளும் தூய வீரபத்திரரே!
தேரேறி வந்தே போரோயச் செய்வீர்
கல்வியங் காட்டிலுறையுங் கற்பக தருவே!
கைதொழுதோமையா காத்தருள் புரிவீர்
சொல்விற்பனமும் அவதானமும் தந்தே
சொர்க்கத்திலிடம் பிடித்திடவே
நல்லதேர் வடம் பிடித்தே நாமிருப்போம்
நற்கதியருள்வீர் பொற்பதத்தாலே!

கோ. சிவசுந்தரமூர்த்தி

## இடம்பெயர்ந்து தங்கியிருப்போர் யாழ். பிரதேச செயலகப் பிரிவில் மட்டுமே நிவாரணம் பெறலாம்

கடந்தாண்டு இடம்பெயர்வைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் தங்கியுள்ளவர்களுக்கான மே மாத நிவாரணக் கொடுப்பனவு இம்முறை யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவிலேயே வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் நிவாரணம் வழங்க வேண்டாம் என்றும் பணிக்கப்பட்டுள்ளது

இதேவேளை—

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த ஜே-61, ஜே 62 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மக்கள் மீளக்குடியேற இதுவரை அனுமதிக்கப்படவில்லை. ஏனைய பகுதிகளில் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட இடங்களிலும் மக்களில் ஒரு பகுதியினரின் வீடு சேதமடைந்திருப்பதன் காரணமாக மீளக்குடியமர முடியாத நிலை உள்ளது.

இந்நிலையிலேயே இவர்கள் யாழ். பிரதேச செயலர் பிரிவுக்கு வந்து நிவாரணத்தைப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ-86)

## லங்கா சிமெந்து ஊழியர்களின் 3மாத சம்பளம் உடன் கிடைக்கும்

### தமது அமைச்சு மூலம் டக்ளஸ் வழங்குவார்

யாழ்ப்பாணம், மே 7

லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்படாதிருந்த சம்பளத்தின் ஒருபகுதியை வழங்குவதற்கு வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு, கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த 200இற்கு மேற்பட்ட ஊழியர்கள் நேற்று அமைச்சரை யாழ். நகரிலுள்ள ஈ.பி.டி.பி. தலைமைச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

கடந்த 6 மாத காலமாகத் தமக்கு வழங்கப்படாதிருக்கும் சம்பளத்தைப் பெற்றுத் தரும்படி இந்தச் சந்திப்பின் போது ஊழியர்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

ஊழியர்களின் கோரிக்கைக்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முதற்கட்டமாக மூன்று மாதச் சம்பளத்தைத் தமது அமைச்சு மூலம் ஊழியர்களுக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தச் சம்பளம் ஒருவார காலத்தில் கிடைக்க ஆவன செய்யப்படும் என்றும் மிகுதிச் சம்பளத்தையும் விரைவில் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-5)

**உதயவாக்கு**

சுயநலக்காரனுக்குச் சுற்றத்தார் இருக்கமாட்டார்கள்.

## பணிப்பாளர் சபை மறுசீரமைப்பு

யாழ்ப்பாணம், மே 7

பரந்தன் கெமிக்கல்ஸ் கொம்பனி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபை மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு — கிழக்கின் தமிழ் விவகார அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவினால் மறுசீரமைக்கப்பட்ட இந்தப் பணிப்பாளர் சபையின் தலைவராகப் பொன்னையா தியாகராசா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் விவரம் வருமாறு:- பேராசிரியர் கே. கே. வை. டபிள்யூ பெரேரா, எச். பத்துரட்ண, நீதிபதி கே. பாலகிட்ணர், என். சந்திரமோகன், ரீ. பாஸ்கரன், கே.ரி.பி. உபசேன.

கடந்த முப்பது ஆண்டுகளில் தமிழ் உறுப்பினர்களின் கூடிய பிரதிநிதித்துவம் உடைய பணிப்பாளர்களைக் கொண்டதாக இச்சபை அமைக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## நாளை

சித்திரை 25
செவ்வாய்க்கிழமை
திதி: பிரதமை
முன் இரவு 7-40 வரை.
நட்சத்திரம்: விசாகம்
பிற்பகல் 2. 25 வரை.
வைசாக்மறுதினம்
சுபநேரம்: 10. 25—11.55
ராகுகாலம்: 2.55— 4.25
(பழைய நேரப்படி.)

## குடிமனைகளில் படையினர் முகாம்

அரியாலை, மே 7

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதிப் பகுதியில் மீளக்குடியமராத மக்களின் குடிமனைகளில் இராணுவத்தினர் புதிதாக முகாமிட்டுள்ளதால் மக்கள் இப்பகுதிக்குச் செல்லத் தயக்கம் காட்டி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ச-17)

# சேமலாப நிதி செலுத்தாதோர் மீது வழக்குத் தாக்கல் செய்ய ஏற்பாடு

## யாழ்.தொழில்திணைக்களம்நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 7

யாழ். குடாநாட்டில் ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தத் தவறும் தனியார் துறையினருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடர்வதற்கு யாழ். தொழில் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் தனியார் துறையில் கடமையாற்றி வருகின்றனர். பல தனியார் நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தத் தவறியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு பல தடவைகள் அறிவுறுத்தல் வழங்கியும் இதுவரை சேமலாப நிதியைச் செலுத்தவில்லை.

இவ்வாறான பலருக்கு எதிராக ஏற்கனவே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்தும் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தாமல் உள்ள தனியார் துறை வேலை கொள்வோருக்கு எதிராக வழக்குகள் தொடரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

# கசிப்பு வழக்கு விசாரணைகள்; ஒன்றரை லட்சம் ரூபா அபராதம்

## இருதினங்கள் வழங்கிய தீர்ப்புகளில்

வலி. வடக்கு, மே 7

சட்டவிரோதமான முறையில் கசிப்பு வைத்திருந்தது மற்றும் கசிப்பு உற்பத்திக்கான கோடா வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் கடந்த வாரத்தில் இரு தினங்களில் மட்டும் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா குற்றப் பணம் விதிக்கப்பட்டது.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் மதுவரித் திணைக்களம் மற்றும் பொலீஸாரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகளின் விசாரணைகளின் போதே இத் தொகை தண்டப் பணமாக நீதிபதியினால் விதிக்கப்பட்டது.

தண்டப்பணம் கட்ட முடியாதவர்களுக்கு மூன்று மாதம் முதல் ஏழு மாதம் வரையான கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

தண்டனை விதிக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் சுன்னாகம் மயிலங்காட்டுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(க-86)

# முன்பள்ளிஆசிரியருக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 7

யாழ். மாவட்டத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புத் தொகை ஒன்றை வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு–கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும் முன்பள்ளி ஆசிரியர்களது நியமனங்கள் உட்பட அவர்களது சேவைகள் யாவும் ஓர் ஒழுங்கு முறைக்குள் கொண்டு வரப்படவுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

முன்பள்ளி ஆசிரியர்களுக்குரிய மாதாந்தக் கொடுப்பனவுகள் சீரற்று இருப்பதாகவும் இதனால் அவர்களது ஆசிரிய சேவையின் முழுப்பயனையும் பெறமுடியாமல் இருப்பதாகவும் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதைபடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தீவகம் உட்பட குடாநாட்டின் பல இடங்களில் சேவையாற்றும் பல முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நிதியிலிருந்து மாதாந்த உதவித் தொகை வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (க)

### கட்டடங்களை அகற்றும் பணிக்கு ஒத்துழைப்பு இல்லை

# கொழும்பு மேயருக்கு எதிராக வழக்குத் தொடர ஏற்பாடு

## அமைச்சர் மங்கள கூறுகிறார்

கொழும்பு, மே 7

கடமைகளை முறைப்படி நிறைவேற்றாமலும், அதிகாரமற்றவகையில் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களை அகற்றும் விடயத்தில் ஆதரவு தர மறுத்தும் மாநகர சபையின், சட்டவிதிகளை மீறிநடந்து வரும் கொழும்பு மேயர் ஏமர் காமிலுக்கு எதிராகத் தனது அமைச்சு சட்டநடவடிக்கை எடுக்கவுள்ளதாக நகர அபிவிருத்தி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரம் குறித்து முதலில் மாகாணசபைக்கும், பின்னர் உள்ளூராட்சி அமைச்சருக்கும் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களில் இருக்கும் சுமார் 2,500 பேருக்குப் பிறப்பிக்கப்பட வேண்டிய முன்னறிவித்தல் 'நோட்டீஸ்' களை அனுப்புவதற்கு மேயர் மறுத்து வருகின்றார். மாநகரசபை சட்டத்தின்படி அவரே சட்டவிரோத கட்டடங்களை அகற்றுவதற்கு அதிகாரம் பெற்றவர் ஆவார்.

செய்தியாளர் மத்தியில் பேசிய அமைச்சர் —

ஆரம்பத்தில் 'மேயர் இப்பணிக்கு ஒத்துழைப்பு வழங்கி வந்தார். ஆனால் இப்பொழுது மறுக்கத் தொடங்கியுள்ளார். புறக்கோட்டையின் ஒல்கோட் மாவத்தையிலும் போதிராஜ மாவத்தையிலுள்ள கட்டடங்களால் பாதிக்கப்படக்கூடியவர்கள் கொழும்பில் யாதாள உலகத்தவரே என்பதால் கொழும்பு மேயர் அவர்களின் கைகளில் ஒரு கைதியாகிவிட்டாரோ என்று எண்ணத்தோன்றுகிறது.

ஐ.தே.கவின் நிர்வாகத்திலிருக்கும் கண்டி, நுவரெலியாவின் மாநகர முதல்வர்கள் இதற்கு ஆதரவு தரும் போது கொழும்பு மேயரின் இச்செயல சந்தேகங்களை எழுப்புகிறது என்று அமைச்சர் மேலும் அங்கு தெரிவித்தார்.

(க)

## வில்லூன்றியில் இன்று தீர்த்தவாரி

யாழ்ப்பாணம் வில்லூன்றி புனித தீர்த்த சித்திரா பூரணைப் பெருவிழா இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை 6. 45 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் 8 மணிக்குத் தீர்த்தவாரியும் இடம் பெறவுள்ளன.

தீர்த்தவாரி முடிவுற்றதும் பொதுமக்கள் தீர்த்தமாடவும், பிதிர்த்தர்ப்பணங்கள் செய்பவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகதேவஸ்தான தர்ம பரிபாலன' சபையினர் அறிவித்துள்ளனர். (க-4)

## ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பைஆரம்பிக்க அனுமதி

யாழ் சென்.ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையில் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் ஜி. சீ. ஈ: உயர்தர கலைப் பிரிவு வகுப்பை ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் க. பரமேஸ்வரன் இது குறித்து பாடசாலை அதிபருக்கு அறிவித்துள்ளார்.

இந்த வகுப்பை ஆரம்பிப்பதற்கு குறைந்த பட்சம் 15 பேர் இருக்க வேண்டும் என்று அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க-51)

## குருக்களுக்கு சிறப்புப் பட்டம்

அளவெட்டி தெற்கு ஸ்ரீ மகாமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ செந்தில்நாத ரவிச்சந்திரக் குருக்களுக்கு ''வேதாகம ஞான வாருதி'' என்ற பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

ஆலய மகா கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடத்தி முடித்த சிவாச்சாரியாரின் சேவையைப் பாராட்டி சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தினரால் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டது. மேற்படி ஒன்றியத்தின் செயலாளர் பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகர சர்மா பாராட்டுப் பத்திரத்தை வாசித்துக் கையளித்தார்.

இந்துசமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சி. விநாசித்தம்பி சிவாச்சாரியருக்கு ''வேதாகம ஞான வாருதி'' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

ஆலய தர்மகர்த்தா சார்பில் அதன் தலைவர் ரவிச்சந்திரக் குருக்களுக்குப் பொன்னாடை போர்த்தினார்.

சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், அருட்கவி சி. விநாசித்தம்பி ஆகியோர் அருளுரை வழங்கினர்.

கும்பாபிஷேகச் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (க-152)

# மாவனல்ல அசம்பாவிதங்கள்; வீரவிதஹனவே சூத்திரதாரிகள்

## பிரதேச முஸ்லிம்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 7

மாவனல்லப் பிரதேசத்தில் இடம்பெற்ற இனக்கலவரத்தின் சூத்திரதாரிகளாக சிங்கள வீரவிதஹன அமைப்பே செயற்பட்டுள்ளதாக அப்பிரதேச முஸ்லிம்கள் தெரிவித்துள்ளனர்.

கண்டியில் இருந்து வந்த குழு ஒன்று பொலீஸாரின் ஒத்துழைப்புடன் முஸ்லிம்களின் உடைமைகளுக்குச் சேதங்களை ஏற்படுத்தியதாகவும், இதுதொடர்பாக ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் நடைபெறும் விசாரணைகளில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இந்தக் கலவரத்தின்போது முஸ்லிம்களுக்குச் சொந்தமான 55 கடைகளும், 20 வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. 5 வாகனங்கள், இறப்பர் தொழிற்சாலை ஒன்றுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது.

(க-4)

# குருநாகல், புத்தளம் பகுதிகளில் வன்முறைகளில் 6 பேர் காயம்

கொழும்பு, மே 7

குருநாகல் மற்றும் புத்தளப் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் இரு சிங்களவர்கள் உட்பட 6 பேர் காயமடைந்துள்ளனர்.

மாவனல்ல பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தின் எதிரொலியாகவே இந்தப் பிரதேசங்களிலும் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர்.

குருநாகல் — போதிராஜ மாவத்தையில் அமைந்துள்ள தேயிலைக் களஞ்சிய உரிமையாளரான முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் கை வெட்டப்பட்டுள்ளது அவரின் மகன், உதவியாளர் ஆகியோர் கத்திக்குத்துக்கு இலக்காகி குருநாகல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் நகரப்பகுதியில் கடந்த சனிக்கிழமை இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இரு சிங்களவரும், முஸ்லிம் ஒருவரும் படுகாயமடைந்தனர்.

(க-6)

# 'சர்வதேசமனிதாபிமானச் சட்டம்' குறித்துதிருமலையில் கருத்தரங்கு

## நீதிபதிகள்சட்டத்தரணிகள்பங்குபற்றுவர்

திருகோணமலை, மே 7

திருகோணமலை மாவட்டத்தின் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் கலந்து கொள்ளும் ''சர்வதேச மனிதாபிமானச் சட்டம்'' பற்றிய கருத்தரங்கு ஒன்றை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு (ஐ. சி. ஆர். சி) நடத்தவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம திகதி காலை 10 00 மணிக்கு உவர்மலை 'செவன் ஐலண்ட்' ஹோட்டலில் இக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

திருமலை மாவட்ட உயர் நீதிமன்ற நீதிபதி, மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமலை மற்றும் மூதூர் மஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருடன் திருமலை மாவட்ட அனைத்து சட்டத்தரணிகளும் இக் கருத்தரங்கில் கலந்துகொள்வர்.

சர்வதேச மனிதாபிமானச் சட்டம், (சர்வதேச போர்ச் சட்டம்) ஜெனிவா உடன்படிக்கையின் கோட்பாடுகள், ஜெனிவா உடன்படிக்கைக்கும், ஐ சி. ஆர். சிக்கும் உள்ள தொடர்பு ஐ. சி ஆர். சி. போர்ச் சூழலில் திருமலை மாவட்டத்தில் மேற்கொண்டு வரும் மனிதநேயப் பணிகள் என்பன பற்றிய விளக்கம் அளிக்கப்படவிருக்கின்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் சட்ட ஆலோசகர் கலாநிதி லக்ஜசித் மென்டிஸ், திருமலை பணிமனையின் பொறுப்பதிகாரி டானியல் ஸ்கிறைபர் ஆகியோர் கருத்தரங்கில் விரிவுரையாற்றுவர்.

(க)

## யாழ். மாவட்ட முன்னாள் எம்.பி. காலமானார்

கொழும்பு, மே 7

யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவரட்ணம் (67 வயது) கடந்த வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

யாழ் இந்துக் கல்லூரியில் அரச ஊழியராகக் கடமையாற்றிய இவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியூடாக அரசியலில் பிரவேசித்தார்

1989 ஆம் ஆண்டில் யாழ். மாவட்ட தேர்தலில் ஈ. பி ஆர். எல். எவ். கட்சியின் சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட இவர் 1994 வரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்துள்ளார்.

(க-6)

# மானிப்பாய் பிரதேசசபை பகுதியில் 40 வித மக்களுக்கே மின் வசதி

வலி தென்மேற்கு, மே 7

வலி தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 40 சதவீதமான மக்கள் பயன்படக்கூடிய வகையிலேயே மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

மிகுதியான பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க இலங்கை மின்சாரசபை இதுவரையில் எதுவித மேற்நடவடிக்கையும் கொள்ளவில்லை என்று புகார் கூறப்படுகிறது

மானிப்பாய்ப் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகளில் எந்தவொரு கிராமத்திலும் முழுமையான மின் இணைப்பு வழங்கப்படவில்லையென பிரதேச சபைத் தலைவர் வெ. அ. ஜோன்சனுக்கு மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை —

முக்கியமான ஆலயங்களுக்கு கூட இதுவரை மின்சார விநியோகம் கிடைக்கவில்லை என்று தர்மகர்த்தாக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(க-185)

# குடாநாட்டில் குடிதண்ணீர் விநியோகம்; 18 திட்டங்களில் நான்கே செயற்படுகின்றன

## யாழ். பிராந்திய அலுவலகப் பணிகள் ஸ்தம்பிக்கும் நிலை

யாழ்ப்பாணம்,மே7

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். பிராந்திய அலுவலகச் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடையும் நிலையிலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.குடாவில் 18 குடி தண்ணீர் விநியோகத் திட்டங்களை நடைமுறைப்படுத்திவந்த இந்த அலுவலகத்தினால் தற்பொழுது நான்கு திட்டங்கள் மட்டுமே செயற்படுத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

1995ஆம் ஆண்டுக்குப் பின் இந்த அலுவலகத் திட்டங்களுக்கென எந்த விதமான நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்படவில்லை.

தொலைபேசி மற்றும் பக்ஸ், வாகன வசதிகள் எதுவும் இந்த அலுவலகத்துக்குச் செய்து கொடுக்கப்படவில்லை.

பொறியியலாளர்கள், பொது முகாமையாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் உட்பட 54 பேர் இந்த அலுவலகத்தில் கடமையாற்றி வருகிறார்கள். இந்த அலுவலகம் கச்சேரி - நல்லூர் வீதியில் ஓர் ஒழுங்கையில் அலுவலக வசதிகளற்ற ஒரு வீட்டில் இயங்கி வருகிறது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உயரதிகாரி ஒருவரின் வீட்டிலே இந்த அலுவலகம் இயங்க வைக்கப்பட்டுள்ள போதும், அலுவலகத்துக்குரிய அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை.

இதேவேளை, 1995ஆம் ஆண்டில் இருந்து இங்குள்ள கணக்காளர் பதவி நிரப்பப்படாமல் இருப்பதாகவும் கணக்காளரின் கடமைகளையும் பொது முகாமையாளரே மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-5-4)

## பிணை மனு மீதான தீர்ப்பு ஒத்திவைப்பு

பௌத்த சாசன பிரதி அமைச்சர் எதிர்வீர பிரேமரத்ன தனது மகனையும், மெய்க்காவலரையும் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரி தாக்கல் செய்த பிணைமனு மீதான தீர்ப்பு வழங்குவதை கொழும்பு உயர்நீதி மன்றம் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

தங்கக் கடத்தல் தொடர்பான விசாரனை ஒன்றிற்காக இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை, குறித்த திகதியில் கொழும்புக்கோட்டை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் நீதிமன்றத்திற்கு சமுகமளிக்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்ற நீதிபதி இமாம் உத்தரவு பிறப்பித்தார். (க)

# சித்திரைக்குச் சித்திரை என்ற சிறப்புடைய பூரணை இன்று

## ஆலயங்களில் கஞ்சி வார்ப்பு

சித்திரை மாதம், சித்திரை நட்சத்திரம் கூடிய பௌர்ணமியே சித்திரா பௌர்ணமி (சித்திரா பூரணை) எனப்படும். சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் இந்தப் பூரணை வருவதால் சித்திரைக்குச் சித்திரை என்ற சிறப்பும் பெறுகிறது. இந்நாள் பிதிர்களைப் பிரீதிப்படுத்துவதற்கு உகந்த நாளாகும். சித்திரபுத்திரன் என்பவன் தற்பரன் ஆக்கிய பொற்பலகையிலிருந்து தோன்றிய நாளும் இந்தச் சித்திரைப் பௌர்ணமியேயாகும். இதுவும் இந்நாளின் விஷேடமாகும். சித்திரபுத்திரன் என்பவன் சீவாத மாக்கள் செய்யும் நல்வினை, தீவினைகளைக் கிரமமாக எழுதி யமனுக்குக் கணக்குக் காட்டி அதன்படி மறு பிறப்பைத் தீர்மானிக்க உதவுவதாக நம்பப்படுகிறது. அதனால் இத்தினத்தில் சித்திரபுத்திர விரதமும் நோக்கப்படுகிறது.

பொன், வெள்ளி ஆகியவற்றால் பொம்மையைச் செய்து அதிலே சித்திர குப்தன் இருப்பதாகப் பாவனை செய்து, நியமப்படி வழிபாடியற்றி, அன்னம், வெல்லத்துடன் கலந்த எள, பால், நெய் முதலியவற்றைப் படைத்து, வழிபாட்டின் முடிவில் பாயசம் நிறைந்த வெண்கலப் பாத்திரம் தானம் கொடுப்பது வழக்கம்.

ஆலயங்களில் இவ்வாறு செய்து சித்திரபுத்திரனார் கதையைப் படிப்பதும் கேட்பதும் வழக்கமாக வந்துள்ளது. ஆலயங்களில் சித்திரைக் கஞ்சி வைத்து வழிபட வருவோர்க்கு வழங்குவதும் ஒரு மரபாகும்.

அன்று முழுநாளும் உப்பில்லாத உணவுண்டும் விரதமிருப்பர். முதல் முறை விரதம் தொடங்கும் போது 5 அல்லது 9 கலசங்களில் சித்திர புத்திரனையும் மற்றும் எட்டுத்திக்கு பாலகர்களையும் (அல்லது நான்கு திக்குபாலகர்களை) இருத்தியதாக வழிபட்டு, தானம், ஓமம், அடியார் போசனம் முதலிய செய்தலுமுண்டு. தாயை இழந்தவர்கள் ஏனைய மாதங்களில் வரும் பூரணை விரதத்தை அனுஷ்டிக்காவிட்டாலும் சித்திரா பூரணையில் விரதமிருப்பது மிக நன்றாகும்.

சித்திர புத்திரனின் வரலாற்றைத் திருவிளையாடற் புராணம் பின்வருமாறு விளம்புகின்றது:

அதாவது தேவேந்திரன் தனது தேவியுடன் குழந்தைப் பேற்றுக்காகத் தவமியற்றினான். அதனை அறிந்த தியாகேசப் பெருமான் திருவுளங் கொண்டு, அகலிகை சாபம் நீக்கி, காமதேனுவை நோக்கி இந்திரன் துயரை உணர்த்தி, அதன் பேறாகச் சித்திர புத்திரனாரை இந்திரனுக்கும் இந்திராணிக்கும் குழந்தையாகப் பிறக்கச் செய்தார் என்பர். இத்தினத்தில் எல்லாப் பலன்களையும் கொடுக்கவல்ல இந்திர வழிபாடு செய்தலும் வழக்கமெனத் தேவி புராணமும் கூறுகின்றது. மருக்கொழுந்து அர்ச்சனை விரும்பப்படுகிறது.

சித்திரா பௌர்ணமியில் முறையாக விரதம் பூண்டு ஆலயம் சென்று திரிகரண சுத்தியுடன் வழிபாடியற்றி, அன்னதானம் செய்பவர்களுக்கு நல்ல பேறுகளும், பிதிர்களின் ஆசீர்வாதமும் நன்மக்கட் பேறும் கிட்டுமென்பர்.

*"வேண்டிய வேண்டியாங்(கு) எய்தலால் செய்தவம்*
*ஈண்டு முயலப் படும்"*

*- க.ச.பிள்ளை.*



கடந்த டிசெம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற காரைநகர் பாடசாலை மாணவர்களைப் பாராட்டி பரிசில் வழங்கும் வைபவம் காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையின் ஏற்பாட்டில் அண்மையில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வே.சாம்பசிவம் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் உள்ளார். (ஐ-7?)

# சேதமுற்ற இந்து நிறுவனங்களை புனரமைக்க அரசு பின்னடிப்பு!

## அமைச்சரிடம் இந்து சமயப் பேரவை முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மே7

பௌத்த நிறுவனங்களும், முஸ்லிம் நிறுவனங்களும், கிறிஸ்தவ நிறுவனங்களும், நடைபெறும் போரில் அழிக்கப்பட்டால் அழிவுச் செய்தி வெளியிட முன் அழிவுக்கான நிவாரணத்தை உடனடியாக வழங்குவோம் என்று கூறி அரசாங்கம் உடனடி புனர்நிர்மாண வேலைகளை நடத்தி வருகின்றது. ஆனால் இந்து நிறுவனங்கள் அழிக்கப்பட்டாலோ அல்லது பாதிக்கப்பட்டாலோ அதைப் பற்றி எவரும் பெரிதுபடுத்துவதும் இல்லை, அதற்குரிய நிவாரணத்தை வழங்குவதற்கு சிந்திப்பதும் கிடையாது. இதுதான் இலங்கைத் திருநாட்டின் இந்துக்களின் நிலைமை.

வடக்கு - கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு, இந்து கலாசார அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்த போது யாழ். இந்து சமயப் பேரவையினர் மேற்கண்டவாறு அவரிடம் தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் யாழ். இந்து சமயப் பேரவைக் குழுவில் பேரவையின் கௌரவ செயலாளர் சி.சக்திகிரீவன், பேராசிரியர் நா.ஞானகுமாரன், அ.நல்லதம்பி ஆகியோர் இடம்பெற்றனர்.

இச்சந்திப்பின் போது அமைச்சருடன் வலி.தெற்குப் பிரதேச சபைத் தலைவர் திரு.கை.கமலசேகரன் உடன் இருந்தார். இக்கலந்துரையாடலில் பேரவையினர் தென்மராட்சி யுத்தத்தில் கைதடிச் சைவச் சிறுவர் இல்லத்துக்கு ஏற்பட்ட இழப்புப் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். இது பற்றி தங்களுக்குப் பல முறை அறிவித்துள்ளதாகவும், இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருப்பது இந்துக்களுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தி உள்ளதாகவும் தெரிவித்தனர்.

இச்சந்திப்புத் தொடர்பாக இந்து சமயப் பேரவை விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யுத்தம் நடைபெற்று ஒரு வருடமாகியும் யாதுமற்ற இந்து அநாதைப் பிள்ளைகள் வாழும் எமது கைதடிச் சைவச் சிறுவர் இல்லத்துக்கு ஒருவித உதவியையும் அரசு வழங்காமல் இருப்பது இந்துக்களை அரசு புறக்கணிப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் பல இந்து ஆலயங்களை நாம் புனரமைத்து வருகின்றோம். இதனை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்றே எண்ணுகின்றோம் - என்றார்.

பேரவையினர் பதிலளிக்கையில், ஆலயங்களைப் புனரமைப்பதை நாம் வரவேற்கின்றோம். எனினும் தாங்கள் இராணுவ நடவடிக்கையால் முதன் முதல் பாதிக்கப்பட்ட செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தை புனரமைக்கவில்லையே என்றனர். மேலும் தென்மராட்சி இராணுவ நடவடிக்கையால் மிகப் பாரிய அளவில் பாதிக்கப்பட்ட இந்து சமயப் பேரவைக்கும், கைதடி சைவச் சிறுவர் இல்லத்துக்கும் ஒரு சதமேனும் வழங்கவில்லை என்பதை மிகுந்த மனவேதனையுடன் தெரிவிக்கின்றோம்.

இந்து அநாதைச் சிறுவர்களை இந்து சமயப் பேரவை சாதாரண இந்து மக்களிடம் பிச்சாபாத்திரத்தை ஏந்தி நின்றேனும் காப்பாற்றியே தீரும். அதற்கு இறைவனுடைய திருவருள் எமக்கு உண்டு. அழிக்கப்பட்ட நிறுவனத்தை புனரமையுங்கள் என்றே கேட்கின்றோம்.

அமைச்சர் இது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த பின் இந்து சமயப் பேரவை தெற்கிலிருந்து வந்த பத்திரிகையாளர்களிடம் தம்மைப் பற்றித் தவறாகக் கூறியதாக பத்திரிகை மூலம் அறிவதாகக் கூறி அது பற்றி நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டார்.

அதற்குப் பதிலளித்த பேரவையினர், தெற்கிலிருந்து வந்த பத்திரிகையாளர் குழுவினரைச் சந்திப்பதற்கு எமது பிரதிநிதியாக பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்களை அனுப்பி வைததோம். அவர்கள் அங்கு பேசிய விடயம் சம்பந்தமாக அறிக்கையை எமக்கு இன்னும் அனுப்பி வைக்கவில்லை. அதுபற்றி எம்மால் எதுவும் சொல்ல முடியாது உள்ளது. அப்படி அவர் கூறியிருக்க மாட்டார் என்று நம்புகின்றோம் என்றனர்.

அமைச்சர், தங்கள் பிரதிநிதியின் கருத்து இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆரோக்கியமானதாக நான் கருதவில்லை. அது விரிசலை ஏற்படுத்துவதாகவே எண்ணுகிறேன் என்றார்.

அதற்குப் பதிலளித்த பேரவையினர், இந்து சமயப் பேரவை இனப் பிரச்சினைத் தீர்வில் தீர்க்கமான - ஆரோக்கியமான - சிந்தனையையே கொண்டுள்ளது. இந்துக்களும் பௌத்தர்களும் இந்த நாட்டின் சகோதரர்கள் என்பதை நாம் நன்கு உணர்ந்து செயற்படுகின்றோம். இதனை எந்த அரசியல்வாதிகளும் குழப்புவதற்கு இடம்கொடுக்கக் கூடாது என்பதே பேரவையினரின் திடமான முடிவு. இதற்காக உழைப்பதே எமது கடமை - என்றனர்.

- இவ்வாறு அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நேர்முகப் பரீட்சை

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகக் கடமையாற்றும் 23 பேருக்கான நேர்முகப்பரீட்சை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடியில் இயங்கும் வலய அலுவலகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(க-117)

## மேலும் 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்.செயலக வளவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்துக்கு மேலும் பத்து லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மூன்று மாடிகளைக் கொண்ட இக்கட்டட நிர்மாண வேலைகள் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது தெரிந்ததே (க-5)

# குருநகர் வீதிகளை புனரமைக்குமாறு மாநகர ஆணையாளருக்கு மகஜர்

குருநகர்,மே7

குருநகர் பகுதியில் முக்கிய பல வீதிகள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. இந்த வீதிகளைப் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ். மாநகரசபை ஆணையாளருக்கு குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

மேலும் குருநகரிலுள்ள சந்திகளிலும், வீதியோரங்களிலும் குவிக்கப்பட்டிருக்கும் குப்பை கூளங்களை அப்புறப்படுத்தி துப்புரவு செய்தல், நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் பொது இடங்களில் காணப்படும் புல் பூண்டுகளை வெட்டுதல், கிருமி நாசனி மருந்து வீச நடவடிக்கை எடுத்தல், மக்கள் அதிகளவில் வசிக்கும் இடங்களில் சட்டவிரோத மது விற்பனை செய்வதையும் மினி சினிமா படக் காட்சி காண்பிப்பதையும் தடை செய்தல் ஆகியவற்றை செயற்படுத்தித் தருமாறும் இம்மகஜரில் கேட்கப்பட்டுள்ளது. (க-51)



# 5ஆவது நிறுவன தி

## தனித்துவம் மிக்க நிறுவனம்

கணனித் துறையிலே யாழ்.மாவட்டத்தில் ஓர் அரும் பெரும் பணியை கடந்த 5 ஆண்டுகளாக ஆற்றிவரும் IIS நிறுவனத்தின் 5ஆவது நிறுவன தின விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். IIS தனது செயற்றிறனும் வினைத் திறனும் மிக்க சேவையினால் இன்று யாழ்.மாவட்ட மாணவ சமூகத் தின் மனங்களில் மட்டுமல்லாது, யாழ்மக்களின் மனங்களிலும் நிறைந்திருக்கின்றது. இந்நிறுவனத்தின் பணி சொற்களில் அடங்கா. IISஇனால் உருவாக்கப்பட்ட கணனி வல்லுநர்கள் இன்று நகரின் பல்வேறு மட்டங்களிலும் சேவையாற்றி வருவது இந்நிறுவனத்தின் உழைப்புக்கு ஒரு சான்றாகும். இந்நிறுவனத்தின் சேவை மேலும் மேலும் பல்கிப் பெருக வேண்டும் என வாழ்த்துவதுடன் இந்நாளில் சான்றிதழ்களைப் பெற இருக்கும் மாணவர்களுக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

**க.சண்முகநாதன்**
*அரச அதிபர்*
*யாழ்ப்பாண மாவட்டம*

## IIS is Commended for It's Services

I am happy to note that the Institute of Informatics Studies is celebrating its 5th Institute day on Monday 7th may, 2001.

I had an Opportunity of being the Chief Guest at the 2nd Institute day. IIS has been helping our youths in Jaffna in learning the most sophistigated subject of the present day, namely, Computer Science .

Its Director, Mr.K.Vignesh is an energetic young man who is keen to propagate the study of Information Technology in Jaffna. He has a good staff to assist him. I Congratulate them for their good service.

May God bless the IIS and its Director and Staff.

**PROF. DR .A.SANMUGADAS**
*Dean/ Faculty of Graduate Studies.*

## காலத்தின் தேவை

உலகம் மிக வேகமாக கணனி மயப்பட்டு வருகின்றது. தொடரும் போரினால் எமது பிரதேசத்துக்கு ஏற்படும் பாதிப்பு கொஞ்சநஞ்சமல்ல. தென்னிலங்கையோடு ஒப்பிடுகையில் நாம் பல தசாப்தங்கள் பின் தங்கிவிட்டோம் என்பது கசப்பான உண்மை.

கல்வித்துறையில் ஏற்படும் பாதிப்பு, பூரணமாகப் புலப்பட மேலும் சில காலமாகலாம். எமது பிள்ளைகளுக்கு, கணனியைக் கையாளு வதில் தேர்ச்சி இல்லாது விடின், இணையத்தின் மூலம் கிடைக்கக் கூடிய விரிந்த ஞானத்தை அவர்கள் இழக்கின்றார்கள் என்பதே பொருள்.

இந்நிலையில் 1996 இன் பின் சில தனியார் கல்வி நிலையங்கள் இளைஞர்களுக்குக் கணனியறிவைப் புகட்டுவதில் முன்னின்றன. Institute of Informatics Studies அத்தகையதொரு முன்னோடி நிறுவனம்.

ஐந்தாவது நிறுவன தின விழாவையும் விருது வழங்கும் வைபவத்தையும் நடத்தும் இந் நிறுவனம் மேலும் விரிவடைந்து நற்பணி செய்ய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை**
*மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,*
*யாழ்ப்பாணம்.*

# Institute of In

## Affiliated




**1996 ஆம் ஆண்டு சிறிய விதையாக விதை**
**பரிணாம வளர்ச்சி பெற்று யாழ்.மாவட்டத்தில் எம**
**பூர்த்தி செய்து இன்று தனது ஐந்**
**எமது நிறுவனத் தாய்க்கு நன்றியு**

(C/16573)

# தின விழாச் சிறப்பிதழ்

f Informatics Studies

IIS

Telephone No: 2831
E-Mail: iis@sltnet.lk.

liated with IMIS, UK

இருத்தி, இவள் தகவல் தொழில்நுட்ப (IT)
ம[illegible]ியாசனம் வைத்த தாய்"




விதைக்கப்பட்டு இன்று பெரு விருட்சமாகப்
தில் எமது கணனிக் கல்வித் தேவையை சிறப்பாகப்
னது ஐந்தாம் அகவையைக் காணும்
நன்றியுடன் இவ்விதழ் சமர்ப்பணம்.

சிறப்பிதழ் அமைப்பு
மாணவர் மன்றம், IIS.

## IIS தன்னிகரில்லாத நிறுவனம்

இன்றைய காலகட்டத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமல்லாது வளர்முக நாடுகளில் கூட "கணனிக்கல்வி" என்பது சமுதாயத்தின் மிக முக்கியமான தேவைகளுள் ஒன்றாக மாறி வருகின்றது. இன்று தகவல் தொழில்நுட்பமும் கணனிக்கல்வியும் இணைந்து உலகத்தையே கிராமம் ஆக்கிவிட்டது.

இத்தகையதொரு காலகட்டத்தில் யாழ்நகரில் கடந்த ஐந்து ஆண்டுகளாக கணனிக்கல்வியை வழங்கிவரும் தன்னிகரற்ற நிறுவனமாக Institute of informatics Studies விளங்கி வருகின்றதென்றால் அது மிகையன்று. கணனிக் கல்வி என்பது வசதி படைத்தவர்களுக்கு மட்டுமே என்ற நிலையை மாற்றி அது ஆர்வமுள்ள சகலருக்கும் பொதுவானதாக அமைய வேண்டும் என்ற நோக்கத்துக்காக இக்கல்வி நிறுவனம், வருடந்தோறும் புலமைப்பரிசில்களை வழங்கி வருவது யாமறிந்ததே.

இன்று யாழ்நகரில் மாத்திரமன்றி யாழ்.குடாநாட்டில் பல்வேறு கிளைகளை நிறுவி, பெருவிருட்சமாக வளர்ந்து நிற்கும் IIS கல்வி நிறுனமானது தனது 5ஆவது பிறந்த தினத்தை கொண்டாடும் இந்நன்னாளில் அது மென்மேலும் சிறப்புற்று தனது சேவையை மேலும் விஸ்தரித்து கணனி உலகில் பல சாதனைகளைப் படைத்து தனக்கென ஒரு நிலையான இடத்தைப்பெற வாழ்த்து வதில் நான் பெருமையடைகின்றேன். அத்தோடு இந்நிறுவனத்தைத் திறம்பட நடத்தி வரும் பெரியோருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வாழ்க நின் சேவை: தொடரட்டும் உன் பணி!

**இராசா தணிகாசலம்,**
*ஆணையாளர், யாழ். மாநகர சபை,*
*01-05-2001*

## தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் முன்னோடிகள்

கணனிப் புரட்சியின் உன்னதத்தால் எங்கும் கிடைக்கின்ற தற்பயன் கணனி (Personal Computer) தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டினால் ஓர் அத்தியாவசியக் கருவியாகி விட்ட இக்கால கட்டத்தில் கணனியைக் கையாள யாவரும் தயாராக இருக்க வேண்டிய கட்டாய தேவை உருவாகியுள்ளது. இத்தகைய தேவைகளை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டுள்ள தனியார் கல்வி நிலையங்களுள் தனது பணியில் ஐந்தாண்டுகளைப் பூர்த்திசெய்து double - ai - es எனப் பிரபல்யம் பெற்று விளங்குகின்ற Institute of informatics Studies முன்னோடியாகத் திகழ்கின்றது என்றால் அது மிகையில்லை. அரச, தனியார் நிறுவன ஊழியர்கள் மற்றும் தனி நபர் எனப் பலதரப்பட்ட ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து இன்னும் தன்பணியைச் செவ்வனே தொடர்ந்து வருகின்ற இதுதன் நோக்கில் மேன்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம். இந்நிறுவனத்தின் முகாமையாளர், நிர்வாக ஊழியர்கள், ஆசிரியர், மாணவர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

**கலாநிதி சீ.மகேசன்,**
B.Sc.(Jaffna),M.Sc.(Cardiff), Ph.D(Wales),MBCS, CEng
*தலைவர், கணனி விஞ்ஞானத்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம், இலங்கை, யாழ்ப்பாணம்.*

## சமுதாயத்துக்கு பேருதவி

தகவல் தொழில்நுட்பம் விரைவாக வளர்ந்து வருகின்ற இக்காலகட்டத்திலே கணனிகளின் தேவைகளும் பயன்பாடுகளும் பல்கிப் பெருகி வருகின்றன. இந்நிலையில் பல்வேறு வகையான மாதிரிகளான நுட்பங்களை அறிமுகப்படுத்தி மனித உலகின் வளர்ச்சிக்கு உதவுவதில் கணனிப் பயிற்சி மையங்கள் எமது சமுதாயத்துக்கு பேருதவி புரிகின்றன. இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் முன்னோடியாக ஆரம்பித்து பல ஆண்டுகளாகத் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கின்ற கணனிப் பயிற்சி நிலையமாகவும் நாடளாவிய ரீதியில் சகல துறைகளிலும் இருந்து பயிற்சி பெறுகின்ற பெரும் எண்ணிக்கையான மாணவர்களை உள்ளடக்கிய ஒரு மத்திய நிலையமாகவும் விளங்குவதுடன் பல கிளை நிலையங்களை பயிற்சியாளர்களின் நலன் கருதி நிறுவித் தொண்டாற்றி வருகின்றது. நவீன உலகின் அதிஉயர் தொழில்நுட்பத் தகவல் தொடர்புகளை வழங்கவும் எதிர்காலத்திலே மேன்மேலும் விரிவுபட்டுத் தனது சேவைகளை வழங்கவும் வாழ்த்துகின்றேன்.

**கல்விப் பணிப்பாளர்.**

## IIS சமூகத்தின் சேவையாளன்

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் சேவைத் திட்டத்திற்கு உதவி செய்வதுடன் இந்த ஆண்டும் 2000 – 2001 காலப்பகுதியில் நல்லூர் லயன்ஸ் கழகம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இருபத்தைந்து வறிய மாணவர்களுக்கு இலவசமாகக் கணனிப் பயிற்சி அளித்ததுடன் பல கல்வி, சமூக, சமயப் பணிகளுக்கு உதவி செய்துவரும் IIS கணனி நிறுவனம் அதன் 5ஆவது நிறுவு தினத்தைக் கொண்டாடுவதுடன் அதன் இயக்குநர் லயன் கே.விக்னேஸ் அவர்களுடன் சேர்ந்து இவ்விழாவைக் கொண்டாடுவதுடன் மேன்மேலும் செழித்து கணனி உலகின் விருட்சமாக வளர வாழ்த்துகின்றோம்.

**லயன் த.சற்குணராசா MJF**
*வலயத் தலைவர்,*
*சர்வதேச லயன்ஸ் கழகம்,*
*முன்னாள் தலைவர், யாழ். வணிகர் கழகம்.*

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புறொயிலர், சேவல், கல்பேட்ஸ், என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். மற்றும் லவ் பேட்ஸ் விற்பனைக்குண்டு. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (87325)

நல்ல நிலையிலுள்ள கிறைண்டிங் மில், மின்மோட்டார் (Three - Phase இங்கிலாந்து, இந்தியா), சீலிங்பான் (National Usha,KDK), வீட்டுத தளபாடங்கள் என்பன விற்பனைக்குண்டு. ந.கதிர்காமராசா (பெயின்ரர்), முத்தட்டு லேன், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (Army Camp இற்கு முன்னால் லேன்). (87473)

### மணமகள் தேவை

54ஆம் ஆண்டு, கார்த்திகை ஆயிலிய நட்சத்திரமுடைய, அரச தொழில் பார்க்கும் இந்து மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்புகளுடன் தொடர்பு கொள்ளவும். விள.இல.1280, மே/பா. உதயன். (87392)

### வியாழமாற்றப் பலாபலன்கள்

இடம்பெயர்ந்தோர் மீண்டும் குடியேற, சமாதான வாழ்வு கிட்டிட, வியாழமாற்றம், சனீஸ்வர வக்கிரக நிவர்த்தி, இராகு-கேது மாற்றப் பலாபலன்களை வாசிக்கத் தவறாதீர்? எங்கும் விற்பனையாகின்றது. சோதிடர் V.A.சிவராஜா வெளியீடு என்று கேட்டு வாங்குங்கள். (87501)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 06 . 04 . 1924

உதிர்வு 18 . 04 . 2000

### திருமதி கந்தன் சின்னப்பிள்ளை

ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாது
உம் நினைவு எத்தனை ஆண்டுகள்
சென்றிடினும் உம் நினைவு எம்
நெஞ்சை விட்டகலாது அம்மா.

இ.இரட்ணகரன்,
*நாவற்குழி கிழக்கு,*
*கைதடி.*
தற்காலிக முகவரி:
*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.*

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

(87510)

## பிறந்துநாள் வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

### உயர்திரு. ஞானப்பிரகாசம் வேதநாயகம்

(லிகிதர் - காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம்)
தனது கடமையிலிருந்து ஓய்வு பெறும்
இவரை சேவை நலன் பாராட்டுவதுடன்
(07.05.2001) 60 ஆவது பிறந்த தின
வாழ்த்துக்களையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

*"அன்னதாரகை",*
*மாலி சந்தி.*

கி.பரமதாஸ் குடும்பத்தினர்.
(C/16580)

## 31ஆம் நாள் நினைவுதினமும், ஆராதனையும்



பூவுலகில் 23 - 12 - 1947

பரலோகில் 07 - 04 - 2001

### யக்கோமுத்து பிரான்சிஸ்சேவியர்

**கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள். அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்.** வெளி:- 14:13

எமது குடும்பத் தலைவர் எம்மைப் பிரிந்து ஆண்டவரோடு சென்ற வேளையில், எமது துன்பத்தில் பங்குகொண்டவர்கள், உதவிசெய்தவர்கள் யாவருக்கும் நன்றி கூறுகின்றோம். அத்துடன் 09.05.2001 புதன் அன்று நடைபெறும் ஆராதனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பழைய விதானையார்*
*ஒழுங்கை,*
*உடுப்பிட்டி.*
(87505)

நினைவு கூரும்:
மனைவி - இராசரெத்தினாம்பாள்,
பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

ஒரு நாள் பிறிமா பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.கிருஷ்ணகுமார், விதானை வளவு, மானிப்பாய். சி.இராமையா, 172 (372), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (87471)

### இலக்கியக் கட்டுரைகள்

O/L மாணவர்களே! உங்கள் பாடநூல்களில் உள்ள ஏழு சிறுகதைகள் 'வீடற்றவன்' நாவல், பொருளோ பொருள் நாடகம் எல்லாவற்றுக்கும் விளக்கங்கள் எழுதியுள்ளார், எல்லா வகை இலக்கியங்களும் படைத்த அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை.(87319)

### விற்பனைக்கு

JAPAN நாட்டுத் தயாரிப்பான SONY NATIONAL T.V.கள் மற்றும் AUDIO DECK SET SPEAKER BOX, F.H. MODEL SET போன்றவை மலிவு விலையில் விற்பனைக்குண்டு இல. 56, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (87484)

நல்ல நிலையிலுள்ள பாவித்த (REMINGTON) ஆங்கில தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. இல. 141, 143, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P: 2037 (87491)

### தவறிவிட்டது

69, செட்டித்தெரு, நல்லூரைச் சேர்ந்த இராஜேஸ்வரன் கௌரிசங்கர் என்பவருடைய விசேட அ.அட்டை (இல.0902044169), சென்.ஜோன்ஸ் மாணவ அ.அட்டை (இல.611) என்பன நல்லூருக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பாடசாலையிலோ அல்லது மேற்படி விலாசத்திலோ ஒப்படைத்துதவவும். (87488)

221, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச்சேர்ந்த சீதாராமசர்மா ஸ்ரீசாரங்கசர்மா என்பவரது தேசிய அ.அட்டை (821022533V) 4.5.2001 அன்று யாழ்நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (875020)

### திருமண சேவை

எம்மிடம் சகல சமயத்திலும் மணமகன், மணமகள் உண்டு. 24.01.1962 இல் பிறந்த, நட்சத்திரம் பூரம், 4ஆம் பாதம் (மணமகன் பிரான்ஸில் இருந்து வந்துள்ளார்). தொடர்பு: கு.அருந்ததி, இல.9, மூத்தவிநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றோட். (88486)

### தேவை

புதிய, பழைய தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள், றோனியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு: R.மருதம், 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி வீதி), யாழ்ப்பாணம். (87351)

### திருத்துதல்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: R.மருதம், 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். (887453)

## முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை

யாழ்ப்பாணம்,மே7

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சி.குகதாசன் தலைமையில் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் "மொறீஷியஸ் விஜய அனுபவங்கள்" என்னும் தலைப்பில் மேலதிக மாவட்டப் பதிவாளர் ந.சதாசிவ ஐயர் கருத்துரை வழங்கவுள்ளார்.

வழமையாக முழுநிலா நாளன்று நடைபெறும் இந்தக் கருத்தரங்கு இம்முறை சித்திரா பௌர்ணமியை ஒட்டி மறுநாள் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-4)

## நல்லை ஆதீனம் புனரமைப்பு; முதலாம் கட்டப் பணிகள் பூர்த்தி

யாழ்ப்பாணம்,மே7

நல்லை ஆதீனத்தின் கட்டடப் புனரமைப்புப் பணிகளில் முதலாம் கட்ட வேலைகள் பூர்த்தி அடையும் நிலையிலுள்ளதாக வடக்கின் மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கலாசார மண்டபம், யோகாசன மண்டபம், சமையற் கூடம், முன்பள்ளி போன்றவற்றின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்து விட்டதாகவும் அவர் கூறினார்.

ஆதீனத்தின் கட்டடத்தின் புனரமைப்பு வேலைகளுக்காக இரண்டாம் கட்டமாக வடக்கின் மீள் குடியமர்வு, புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையினால் 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி கூறினார். (க-5)

## இளங்கலைஞர் மன்றம்

## வருடாந்த இசைவிழா - 2001

**மன்றக் கலாமண்டபத்தில் நடைபெறும்.**

*இன்று (07.05.2001) திங்கட்கிழமை*

**4ஆம் நாள் கலை நிகழ்ச்சிகள்**

### காலை நிகழ்ச்சிகள்

**9.30 - 10.30 மங்கள இசை:**

சுந்தரம் தையல்நாயகி, சு.சசிகுமார் } *நாதஸ்வரம்*
உ. செல்வகுமார், மு. குணம் } *தவில்*

**10.30 - 11.00 புல்லாங்குழல் இசை:**

ஷர்மிளா ரதிகரன் - *புல்லாங்குழல்*
பாமினி நாகரத்தினம் - *வயலின்*
K. கஜன் - *மிருதங்கம்*
V. ரமணன் - *முகர்சிங்*

**11.00 - 11.45 வயலின் இசை**

K. பத்மநாதன் - *வயலின்*
P. சியாமகிருஷ்ணா - *மிருதங்கம்*
K. நந்தகுமார் - *முகர்சிங்*

**11.45 - 12.25 இசைக்கச்சேரி:**

பொன் ஸ்ரீ வாமதேவன் - *பாட்டு*
K. குகபரன் - *வயலின்*
M. சிதம்பரநாதன் - *மிருதங்கம்*
S. சண்முகசுந்தரம் - *கெஞ்சிரா*
A. செல்வரத்தினம் - *கடம்*

### மாலை நிகழ்ச்சிகள்

**மாலை 3.30 - 4.30 மங்கள இசை:**

S.K. உதயநாதன், R. கோபாலகிருஷ்ணன் } *நாதஸ்வரம்*
M. ஜெயானந்தன், S. உதயகுமார் } *தவில்*

**4.30 - 5.30 வயலின் இசை:**

R. ராதாகிருஷ்ணன், சைந்தவி ராதாகிருஷ்ணன், சுஜாத்தா தேவராஜா } *வயலின்*
S. துரைராசா - *மிருதங்கம்*
S. ராசா - *முகர்சிங்*
K. அனந்தகோபன் - *கெஞ்சிரா*

**5.30 - 6.30 பரதநாட்டியம்:**

ஸ்ரீ மோகனா பாலசுப்பிரமணியம் அவர்களின்
'உதயனைத் தந்த உத்தமி'
நாட்டிய நாடகம்

**கலைஞர்கள், ரசிகர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*சட்டநாதர் வீதி,*
*நல்லூர்.*
(37414)

**- மன்றத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மொட்டென தாயின் மடியில் 05 - 11 - 1968

பட்டென இறை அடியில் 11 - 05 - 1998

அமரர்

### பாஸ்கரமூர்த்தி முரளிதரன் (முரளி)

**திதி: 07-05-2001**

ஆண்டுகள் மூன்று ஓடிமறைந்தாலும் - எங்கள்
அகத்தினில் உறைந்து தெய்வமாய் வாழ்கின்றீர்கள்
நீண்ட நினைவுகளைச் சுமந்து வாழ்கின்றோம்
நினை வழியா உங்கள் வாழ்நாளை எண்ணி!

*இல.594/2 கே.கே.எஸ்.வீதி,*
*நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*
(87503)

என்றும் உங்கள்
நினைவுகளுடன் வாழும்:
சகோதரர்கள், உறவினர்கள்,
நண்பர்கள்.

# உலகில் செய்தியாளர்களின் மிக மோசமான எதிரிகள்...!

நியூயோர்க், மே 7

செய்தியாளர்களின் மிக மோசமான உலக எதிரிகளின் பெயர்கள் அடங்கிய பட்டியலை சர்வதேசச் செய்தியாளர்கள் பாதுகாப்புக் குழு வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டில் 22 செய்தியாளர்களைச் சிறையில் அடைத்த சீனத் தலைவர் ஜியாங் ஸெமின், கடந்த ஆண்டின் இறுதியில் 30 க்கும் மேலான பத்திரிகைகளைத் தடை செய்த ஈரானிய்த தலைவர் அயதொல்லா கொமேனி ஆகியோர் இந்தப் பட்டியலில் முக்கிய இடம் பிடித்துள்ளனர்.

லைபீரியாவின் சார்ள்ஸ் டெய்லர், ஸிப்பாப்வேயின் ரொபேர்ட் முகபே, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், கொலம்பிய பரா இராணுவத் தலைவர் கார்லோஸ் சஸ்டானோ, யூகோஸ்லாவிய முன்னாள் அதிபர் சொலபொடான் மிலோ செவிச், சியாரா லியோனின் தீவிரவாதத் தலைவர் பொடே சங்கோ பெருவின் முன்னாள் அதிபர் பியூஜிமோரி, கியூபாவின் பிடல் காஸ்ட்ரோ, டுனிசியாவின் பென் அலி, மலேசியப் பிரதமர் மஹாதிர் மொகமட், உக்ரைனின் குச்மா ஆகிய தலைவர்களின் பெயர்களும் அந்தப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

# செச்சினியாவில் பொதுமக்களை ரஷ்யப்படை அடித்துக் கொன்றது

## குரோஸ்னி நகர மேயர் குற்றச்சாட்டு

குரோஸ்னி, மே 7

செச்சினியாவில் ரஷ்யப் படைகள் பல அப்பாவிப் பொதுமக்களை அடித்துத் துன்புறுத்திக் கொலை செய்ததாக குரோஸ்னி நகர மேயர் பிஸ்லான் கண்டமிரோல் தெரிவித்துள்ளார்.

குரோஸ்னியில் இடம் பெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் கூறினார்.

செச்சினியத் தீவிரவாதிகளுடன் எந்தவிதத் தொடர்பும் அற்ற பொதுமக்களை ரஷ்யப் படைகள் துன்புறுத்திக் கொன்றதாகவும்—

ரஷ்யப் படைகளின் ஷெல் தாக்குதல்களில் மேலும் பலர் படுகாயமடைந்ததாகவும்—

குரோஸ்னி மேயர் தனதுரையில் குறிப்பிட்டார்.

எவ்வித காரணங்களுமின்றி பொதுக் குடியிருப்புகள் மீது ரஷ்யப் படைகள் மூர்க்கமாகத் தாக்கியதாகவும் அவர் கூறினார்.

செச்சினியாவில் பிரிவினை கோரும் தீவிரவாதிகளை அடக்க இரண்டு ஆண்டுகளின் முன்னர் ரஷ்யா செச்சினியா மீது படை நடவடிக்கையை மேற்கொண்டது.

அப்போது தொடக்கம் இத்தகைய குற்றச்சாட்டுகள் எழுந்து வருகின்றன. ஆனால் அவற்றை ரஷ்யா நிராகரித்தே வந்துள்ளது.

தற்போது ரஷ்ய ஆதரவு மேயரான கண்டமிரோல் பொதுமக்களை ரஷ்யப் படை கொன்றதாகக் குற்றஞ்சாட்டியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஒ)

# சுவிஸ் வங்கிக் கணக்கில் இடப்பட்ட கோடிக்கணக்கான டொலர்களை பெனாஸிர் இழக்க நேரிடுமாம்

லண்டன், மே 7

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவும், அவரது கணவர் ஆசிப் அலி சர்தாரியும் சுவிற்சர்லாந்து வங்கியில் சேர்த்து வைத்துள்ள கோடிக் கணக்கான டொலர்களை இழக்க நேரிடும் என்று கூறப்படுகிறது.

வெளிநாட்டுத் தொலைக்காட்சி சேவைக்கு அளித்த பேட்டியில் சுவிற்சர்லாந்து அரசின் சட்டத்தரணி இத்தகவலை வெளியிட்டார்.

இந்தப் பணம் பெனாஸிருக்கோ, அவரது கணவருக்கோ தரப்படமாட்டாதெனவும்— பாகிஸ்தானில் தற்போதுள்ள அரசு ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்படாத இராணுவ ஆட்சி என்பதால், அதனிடமும் ஒப்படைக்கப்பட மாட்டாது என்றும் — அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி ஏற்பட்டால் அதனிடம், இந்தப் பணத்தை ஒப்படைப்பது பற்றி யோசனை நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்

பெனாஸிர் பதவியிலிருந்த போது அவரும் அவரது கணவரும் ஊழல் புரிந்து சேர்த்து சுவிஸ் வங்கியில் இடப்பட்ட பணத்தை திரும்பப்பெற பாகிஸ்தானின் இராணுவ அரசு கோரி வருவது தெரிந்ததே. (ஒ-6-9)

## அசாமில் தேர்தல் படுகொலைகள்!

கௌகாத்தி, மே 7

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் 'உல்பா' தீவிரவாதிகள், சட்டசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைக் கட்சி வேறுபாடின்றிக் கொன்று வருகின்றனர்.

இதுவரை சுமார் 25 இற்கும் மேற்பட்டவர்கள் தேர்தல் தொடர்பாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

## லைபீரியாவில் தடையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

மொன்ரோவியா, மே 7

மேற்கு ஆபிரிக்க நாடான லைபீரியா மீதான ஐ நாவின் பொருளாதாரத் தடைகளை நீக்கும்படி கோரி ஆயிரக்கணக்கான மக்கள் நாட்டின் தலைநகரில் நேற்று அமைதி ஆர்ப்பாட்டம் நடத்தினர்

அயல் நாடான சியாரலியோனில் உள்நாட்டு யுத்தத்தைத் தூண்டி விடுவதாகக் குற்றஞ்சாட்டியே லைபீரியா மீது தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. (ஒ-6-9)

## பலஸ்தீனப் பிரதேசங்களில்

# யூதக்குடியேற்ற நடவடிக்கையை; நிறுத்த இஸ்ரேலிடம் வலியுறுத்து

காஸா, மே 7

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பகுதிகளில் மேற்கொண்டுவரும் யூதக்குடியிருப்புகளுக்கான கட்டட நிர்மாணப் பணிகளை நிறுத்தும்படி இஸ்ரேலிடம் வலியுறுத்தப்பட்டது.

மேற்குக்கரை வன்முறைகள் ஏற்படும்காரணங்கள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவே இவ்வாறு கேட்டுள்ளது.

இஸ்ரேலிய பலஸ்தீன அரசுகளிடம் தனித்தனியாக அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ள உண்மையைக் கண்டறியும் குழு அப்பகுதிக்கு சர்வதேச அமைதிப்படையை அனுப்பப் பரிந்துரை செய்யவில்லை.

இதற்கிடையில், மேற்குக் கரை மற்றும் காஸாப் பகுதிகளில் ஆயுதம் தரியாத சர்வதேசக் கண்காணிப்புப் படையொன்றை நிலைகொள்ளச் செய்யும் தனது முயற்சிக்கு அணிசேரா நாடுகள் இயக்கம் ஆதரவளிக்க வேண்டுமென்று பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

( ஒ - 6 - 9 )

## அமெரிக்கா கவலை

ரஷ்யாவில் சுதந்திரச் செய்தி ஊடகம் ஒன்றை அந்த நாட்டின் அரச நிறுவனம் பொறுப்பேற்றதற்கு அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

இது கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை என்றும் அமெரிக்கா கூறியுள்ளது.

(ஒ)

# வருடாந்தம் 30,000 பேர் அமெரிக்காவில் தற்கொலை

வாஷிங்ரன், மே 7

அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் சுமார் 30 ஆயிரம் பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

இன்று முதல் அனுஷ்டிக்கப்பட உள்ள தேசியத் தற்கொலைத் தடுப்பு வாரத்தை யொட்டி, அரசு வெளியிட்ட அறிக்கையில் இத்தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் அமெரிக்காவில் கொலை செய்யப்படுபவர்களை விட, தற்கொலை செய்து இறப்பவர்களின் எண்ணிக்கை 50 சதவீதத்துக்கும் அதிகமாகும்.

இதைத் தவிர சுமார் 6 லட்சத்து 50 ஆயிரம் பேர் அமெரிக்காவில் வருடாந்தம் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

தேசியத் தற்கொலைத் தடுப்பு வாரத்தில், மனநல ஆலோசனைகள், தற்கொலைத் தடுப்பு நிகழ்ச்சிகள் போன்றவற்றை மேற்கொள்ள அமெரிக்க அரசு திட்டமிட்டுள்ளது. (ஒ)

## மனித உரிமைக் குழுவில் அங்கத்துவமிழப்பு:

# அமெரிக்காவின் அடாவடித்தனத்திற்கு கிடைத்த அடி என்கிறது கியூபா

ஹவானா, மே 7

ஐ. நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அமெரிக்கா உறுப்புரிமையை இழந்தது அதன் அடாவடித்தனத்துக்குக் கிடைத்த அடி என்று கியூபா வர்ணித்துள்ளது.

இது தொடர்பாக கியூபா வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் அமெரிக்கா தோற்கடிக்கப்பட்டதை வரவேற்பதாகவும்—

சர்வதேச அமைப்புகளின் தலைமைத்துவத்தைப் பெற அமெரிக்கா கையாண்ட முறைகளைச் சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதையே இந்தச் சம்பவம் எடுத்துக் காட்டுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதேசமயம், ஐ நாவுக்கு செலுத்த வேண்டிய கடனைச் செலுத்துவதில் அமெரிக்கா காட்டும் அக்கறையின்மையும், நிலக்கண்ணி வெடிகளை ஒழிக்கும் ஒப்பந்தம், சர்வதேச நீதிமன்றம் ஏற்படுத்துதல், 'எய்ட்ஸ்' எதிர்ப்பு மருந்துகள் அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்யும் நடவடிக்கை ஆகியவற்றில் அமெரிக்காவின் ஒருதலைப்பட்சமான நிலைப்பாடுகள் ஆகியவை அமெரிக்காவின் நேச நாடுகளைக் கூட அதிருப்தியடையச் செய்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஐ நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்புரிமைக்கான தேர்தலில் அமெரிக்கா தோற்றுப் போனது தெரிந்ததே.

3 உறுப்பு நாடுகளை தேர்ந்தெடுக்க நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் பிரான்ஸிற்கு 52 நாடுகளும், அவுஸ்திரேலியாவுக்கு 41 நாடுகளும், சுவீடனுக்கு 32 நாடுகளும், அமெரிக்காவுக்கு 29 நாடுகளும் ஆதரவளித்திருந்தன. (ஒ)

# சர்வதேச அகதிகள் சட்டத்தை திருத்தக் கோருகிறார் பிளேயர்

லண்டன், மே 7

சர்வதேச அகதிகள் சட்டத்தைத் திருத்தும்படி பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயர் 'டைம்ஸ்' பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் யோசனை வெளியிட்டுள்ளார்.

அந்தச் சட்டம் 50 ஆண்டுகளுக்கு முன்னர் வித்தியாசமான சூழ்நிலையில் நிறைவேற்றப்பட்டவை என்றும் பிரதமர் பிளேயர் குறிப்பிட்டுள்ளார்.

1961 ஆம் ஆண்டு ஐ. நா. அகதிகளுக்கான பிரகடனம் வரையப்பட்ட பின்னர் நிலைமை மாறி விட்டதாகவும், தகுதியற்றவர்களின் விஷயங்கள் விரைவாகத் தீர்க்கப்பட்டு, உண்மையான அகதிகளுக்கு அதிக உதவிகள் வழங்கப்படும் வகையில் புதிய திருத்தங்கள் அமைய வேண்டும் என்றும் —

பிளேயர் தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் பிரிட்டனில் தேர்தல் நடைபெற உள்ளது. தற்போதைய அரசாங்கம் போலி அகதிகள் விஷயத்தில் மென்மையாக நடந்து கொள்வதாக எதிரணியான கன்சர் வேடிவ் கட்சியினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இதனை முறியடிக்கவே பிரதமர் பிளேயர் அகதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரமாக அமுல்படுத்தி வருவதாகக் கருதப்படுகிறது. (ஒ)

## பாப்பரசர் சிரியா விஜயம்

டமஸ்கஸ், மே 7

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் சிரியா சென்றடைந்தார்

சிரியாவில் பாப்பரசரை டமஸ்கஸ் விமான நிலையத்தில் வைத்து சிரிய அதிபர் பஸார் அல்அஸார் வரவேற்றார்.

## இந்திய - இஸ்ரேல் உறவு குறித்து திருப்தி

டெல்அவிவ், மே 7

பாதுகாப்பு உட்பட பல்வேறு துறைகளில், இந்தியாவுடனான இஸ்ரேலின் உறவுகள் மேம்பட்டு வருவது குறித்து இஸ்ரேல் மன நிறைவு அடைந்துள்ளது.

இஸ்ரேலில் இந்திய கடற்படைத் தலைவர் சிசில்குமாரைச் சந்தித்த இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் பெஞ்சமின் பென் எலிஷர் இவ்வாறு தெரிவித்தார்.

(ஒ)

# இந்தியாவில் அமைக்கப்பட்ட மிக நீளமான குழாய்ப் பாதை

புதுடில்லி, மே 7

உலகில் மிக நீளமான குழாய்ப்பாதை இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலத்தின் ஜாம் நகரில் இருந்து 3 மாநிலங்களின் ஊடாக உத்தரப் பிரதேசத்தின் லோனி நகர்வரையிலான 1670 கிலோ மீற்றர் தூரத்துக்கு இந்தக் குழாய்ப் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 1650 கோடி ரூபா செலவில் இந்திய எரிவாயுக் கழகம் இந்தக் குழாய்ப் பாதையை அமைத்துள்ளது.

நாளை மறுதினம் புதன் கிழமை இந்தக் குழாய்ப் பாதையை பிரதமர் வாஜ்பாய் நாட்டுக்கு அர்ப்பணிப்பார்.

17 லட்சம் தொன் சமையல் எரிவாயுவை குழாய்ப் பாதை வழியாகக் கொண்டு செல்ல முடியும்.

(ஒ)

# வள்ளங்களில் பாயை பயன்படுத்தி மீன்பிடிக்க அனுமதி கிடைக்கும்

யாழ். குடாக் கடலில் மீன் பிடித் தொழிலில் ஈடுபடும் வள்ளங்களில் பாய்களைப் பயன்படுத்துவதற்கு படைத் தரப்பினால் அனுமதி வழங் கப்பட்டுள்ளதாக வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு —கிழக்கு தமிழ் விவகாரங் கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள் ளார்.

ஓரிரு தினங்களில் குருநகர் பகுதி மீனவர்கள் வள்ளங் களில் பாய்களைப் பொருத்தி மீன்பிடித் தொழிலில் ஈடுபடு வதற்கான உத்தியோக பூர்வ அறிவிப்பை அப்பகுதி யிலுள்ள படையினர் வெளி யிடுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை —

மீன்பிடிக்கும் நேரம், தூரம் போன்றவற்றை அதிகரிப்பது தொடர்பாகவும் படைத்தரப்புடன் கலந்தலோசிக்கப்பட் டுள்ளதாகவும் இது குறித்து சாதகமான முடிவுகள் விரை வில் அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித் தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவை கடற்றொழி லாளர் சங்கங்களின் பிரதிநிதி கள் அண்மையில் சந்தித்து பருவக்காற்றுத் தொடங்கி யிருப்பதால் பாய்களை வள்ளங்களில் பொருத்தி தொழிலுக்குச் செல்வதற்கு அனுமதி பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர் என்று ஈ.பி.டி.பி. வெளி யிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பௌத்தத்தை அரச மதமாக பிரகடனம் செய்யவேண்டும்

## மகாசங்கத்தினர் வலியுறுத்துவர்

பௌத்த சமயத்தை அரச மதமாக பிரகடனம் செய்ய வேண்டும் என நாற்பதுக்கும் மேற்பட்ட பௌத்த அமைப் புகள் அரசாங்கத்திடம் வலி யுறுத்தவுள்ளன.

இது தொடர்பான நட வடிக்கைகளில் மகாசங்கத்தி னர் துரிதமாக ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

பௌத்தசமயம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ள தாகவும் கூறப்படுகிறது.

பிற சமயங்கள் நாட்டுக் குள் ஊடுருவி பௌத்தர்களை மதம் மாறச் செய்து விடுவ தாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

நாட்டில் தற்பொழுது புதி தாக உருவாகிவரும் சிலவெளி நாட்டு நிறுவனங்களினால் பௌத்த சமயத்துக்கு அநீதி ஏற்படுத்தும் வேலைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பௌத்த அமைப்பு கள் குற்றம் சாட்டியுள்ளன.

## சுற்றுலா அறிவித்தல்

கலைப்பீட முதலாம் வருட மாணவர்களால் நாளை (08-05-01) செவ் வாய்க்கிழமை ஒழுங்கு செய்யப்பட்ட சுற்றுலா வானது தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போ டப்பட்டுள்ளது.

**1 ஆம் வருட பிரதிநிதி**

(87519)

# மரண அறிவித்தல்கள்

## பெருமாள் நாகரெத்தினம்

வேலணை மேற்கு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப் பிடமாகக் கொண்டவரும் 420, நாவலர் வீதி, ஆனைப் பந்தியைத் தற்காலிக வசிப்பிடமாக் கொண்டவருமா கிய பெருமாள் நாகரெத்தினம் 5-5-2001 சனிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பெருமாள்—தையலம்மா வின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பையா—பார் வதியின் அன்பு மருமகனும் இராசலெட்சுமியின் அன்புக் கணவரும் கமலா, மலர், காலஞ்சென்ற சாரதாதேவி, சந்திரா (கொழும்பு), நகுலராணி (சமுர்த்தி முகாமை யாளர், பிரதேச செயலகம், வேலணை), விமலராணி (குடும்பநல உதவியாளர், யாழ். மாநகர சபை), நாகேஸ்வரன், பரமேஸ்வரன், தனுஜா (யாழ். இந்து மகளிர் கல்லூரி 2001 கணிதப் பிரிவு மாணவி) ஆகி யோரின் அன்புத் தந்தையாரும் தங்கராசா, விமலேந் திரன், குமார் (கொழும்பு), யசோதா ஆகியோரின் அன்பு மாமனாரும் இராஜிகா, சர்மிளா, சுபாஸ்கரன், காயத்திரி, ரஜிதா, நிரோஜா, கிருஷாந்தன், பிரகாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
நா. சிவா (மகன்)

420, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (87518)

## திருமதி வேதநாயகம் இராஜேஸ்வரி

(ஆங்கில ஆசிரியை, வட்டு. கிழக்கு—இராஜேஸ் ரீச்சர்)

வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிட மாகவும் நுவரெலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேதநாயகம் இராஜேஸ்வரி 04--05--2001 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அ. வேதநாயகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி ந. மரகதத் தின் அன்புச் சகோதரியும் த. தவநேசனின் அன்புச் சகோதரியும் த. ஆரூரன், த. செந்தூரன் ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் மருமகன் திருமதி வி. இராதாகிருஷ்ணன் (நுவரெலியா) அவர் களின் இல்லத்தில் நேற்று (06—05--2001) நடைபெற் றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
செ பாலசுப்பிரமணியம்
(அண்ணா)

மயில உடையார் வளவு,
தெல்லிப்பழை வீதி,
வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை. (சி/16583)

## செல்வி சர்மிலி கருணாகரன்

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த பொன்னுத்துரை கருணாகரன் - தெய்வநாயகி அவர்களின் அன்பு மகள் சர்மிலி நேற்று (06-05-2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் குகப்பிரசாந்தன் (கொழும்பு இந்துக் கல்லூரி) அவரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்ற பொன்னுத்துரை மற்றும் சோதி, மட்டுவில் தெற்கு இளைப்பாறிய ஆசிரியர் தாமோதரம்பிள்ளை சொர்ணலக்ஷ்மி ஆகியோரின் பேர்த்தியும் றஞ்சித் (கொழும்பு), வசந்தா ரவிசந்திரன் (கனடா), சிவ சிந்திநாதன் (கனடா) ஆகியோரின் மருமகளும் சதானந்தசிவம் (கனடா), சிந்தநாயகி (சுவிஸ்), சர்வ நாயகி (சுவிஸ்), ரவிச்சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07 - 05 - 2001) திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் நல்லடக்கத் துக்காக இருலன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. கருணாகரன் (கருணை)
(தகப்பன்)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (சி/16591)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழ கங்களுக்கு இடையில் ஆர். ராஜ்குமார் வெற்றிக் கிண்ணத்துக்காக வேம்படி மகளிர் கல்லூரி ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட் டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் அரை யிறுதி ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணி — பெண் கள் — பட்டர்பிளை வி. க. எதிர் ஜொலிஸ்ரார் வி க.

★ மாலை 5 மணி — ஆண் கள் — யாழ் பல்கலைக் கழகம் வி.க. எதிர் பற்றீஸி யன் வி. க. (க-3)

★ ★ ★

யாழ். மாவட்ட விளை யாட்டு அவையினால் நடத் தப்படும் உதைபந்தாட்டக் கண்காட்சிப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு தெல்லியடி ம. ம. வித்தியாலய மைதா னத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக்கண்காட்சிப்போட்டி யில் யாழ். மாவட்ட உதை பந்தாட்ட அணியை எதிர்த்து பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக் தெரிவு அணியும் குருநகர் பாடும் மீன் வி.கவை எதிர்த்து அல்வாய் மனோ கரா வி.கவும் விளையாட உள்ளன. (க-5)

★ ★ ★

ஜொலிஸ்ரார் விளையாட் டுக் கழகம் ஈ.எஸ்.பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணை யுடன் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி ஸி ஸி வி,க. அணியும் மானிப்பாய் பரிஷ் வி. க. அணியும் மோதவிருக்கின்றன

# சமய சந்நிதிகளில்

ஆனைக்கோட்டை கரைப் பிரான் ஆதி விநாயகர் தேவஸ்தான பிரம்மோற்ச வம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்குக் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 14 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தேர் உற்சவமும் மறு நாள் காலை 9-15 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம் பெறும்.

உற்சவ காலங்களில் தின மும் மாலை 6 மணி முதல் 7 மணி வரை ''கம்பராமய ணம் என்னும்'' தலைப்பில் அ. குமாரவேல் சொற்பொழி வாற்றுவார். (க 4)

★ ★ ★

வட்டுக்கோட்டை மேற்கு மோதக மாமரப்பிள்ளையார் ஆலயத்தில் சித்திரா பூரணை விசேட பூசையும் வருடாந்த சஞ்சி வார்த்தலும் இன்று இடம்பெற உள்ளன. சித்திர புத்திரர் புராணம் படிப்பும் இடம்பெறும். (ஐ)

# 13 ஆம் ஆண்டு திருமண நன்னாளும் 28ஆம் நாள் கண்ணீர் அஞ்சலியும்



பிறப்பு:
23 - 01 - 1954

இறப்பு;
10 - 04 - 2001

## திருமண நாள் 07-05-2001

சீரணியில் வந்துதித்த நாகபூசணியின் பாலகியாய் பேரெடுத்து 7 ஆம் கட்டை, சண்டிலிப்பாயில் பிறந்து நாவாந்துறை எனும் பதியினிலே புகுந்த வீடாகவும் தேர்ந்தெடுத்து கலட்டி அம்மன் வீதியில் வாழ்விடமாக வும் இருந்த எமது வீட்டுக்கு விளக்கேற்றி வைத்த முதல் குலவிளக்கு 10—04—2001 கொடிய காலன் நெடிய நோயினைக் கொடுத்து பறித்திட்டான் உயி ரினை அணைந்தது எமது குடும்பதீபம் நாம் எப்படி ஆறுவோம் ஆறியே தேறுவோம்!

எமது அன்பான அண்ணிக்கு எமது இதய
கண்ணீர்அஞ்சலிகள்.

மாமா—மாமி,
இரவீந்திரன் குடும்பம்,
குணசாந்தன் குடும்பம்,
பஞ்சாட்சரம் குடும்பம்.

அ. பஞ்சாட்சரம்,
இல 70, கடற்கரைவீதி, நாவாந்துறை. (87521)

# மரண அறிவித்தல்

## கதிரேசு பரமேஸ்வரி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்,
உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை)

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த கதிரேசு பரமேஸ் வரி நேற்றிரவு காலமானார்.

இவர் கதிரேசு மகேஸ்வரியின் சகோதரியும் சாந்தாவின் சிறிய தாயாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் உரும்பிராயிலுள்ள அவரது இல் லத்தில் இன்று [திங்கட்கிழமை] மாலை 3-30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
சாந்தா
(பெறாமகள்)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (சி/16593)

# மாவனல்ல அசம்பாவிதங்களுக்கான பொறுப்பை அரசே ஏற்க வேண்டும்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகிறார்

கொழும்பு,மே7

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியவர்கள் கவனயீனமாகவும், உடந்தையாகவும் இருந்ததன் காரணமாகவே மாவனல்லவில் இவ்வாறான மோசமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்தச் சம்பவங்களுக்கான தார்மீகப் பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும் - இவ்வாறு ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும், உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக வாணிப, கப்பற்றுறை, முஸ்லிம் விவகார அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை பாகிஸ்தானில் இருந்து நாடு திரும்பிய அமைச்சர் மாவனல்லவுக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்ட போது இவ்வாறு தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம் சமூகத்தின் அடையாளத்தை அழித்தொழிக்கும் முயற்சியாகவே இது காணப்படுகிறது. ஆனால், எந்தவொரு காலத்திலும் அவ்வாறானதொரு நிலையை ஏற்படுத்த முடியாது. இச்சம்பவத்திற்கான தார்மீகப் பொறுப்பை அரசாங்கமே ஏற்கவேண்டும். யுத்தச் சட்டத்தின்படி மத வழிபாட்டுத் தலங்களை தாக்குவது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் இங்கு பள்ளிவாசல்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன், புனித குர்ஆனும் எரிக்கப்பட்டுள்ளமை மிகவும் மோசமான செயற்பாடுகளாகும்.

சேதமாக்கப்பட்டுள்ள பள்ளிவாசலை அரசாங்கத்தின் செலவிலேயே புனரமைப்பதற்கும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உயர்ந்தபட்ச நஷ்டஈடு பெற்றுக்கொடுக்கவும், இப்பகுதியில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பாதுகாப்பு முகாம் ஒன்றை அமைப்பது சம்பந்தமாகவும் அரசை நாம் நிர்ப்பந்திக்கவுள்ளோம். இந்தச் சம்பவத்தின் பின்னணியில் நின்று செயற்பட்டவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (க)

### பருத்தித்துறை - மருதங்கேணி

## வீதிப் புனரமைப்பு வேலைகளுக்கு ஒரு கோடி 60 லட்சம் ரூபா ஒதுக்கீடு

வடமராட்சிகிழக்கு,மே7

பல வருடங்களாகத் திருத்தப்படாமல் இருந்த பருத்தித்துறை - மருதங்கேணி வீதியைப் புனரமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்.அரச அதிபர் இந்த வீதியைத் திருத்தி அமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு 1கோடியே 60 லட்சம் ரூபா பெற்றுக் கொடுத்ததை அடுத்து வீதி திருத்தியமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

வல்லிபுரக் கோயிலில் இருந்து அம்பன் வரையும் இந்நிதியில் திருத்த வேலைகள் நடைபெறவுள்ளன.

(க-182)

## சிங்களத் தீவிரவாதிகளே குமார் கொலைக்குக் காரணம்

### அமெரிக்கத் திணைக்களம் அறிக்கை

கொழும்பு,மே7

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டமைக்கு சிங்களத் தீவிரவாதிகளே காரணம் என அமெரிக்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

"உலகளாவிய பயங்கரவாதம்" என்ற பொருளில் அந்தத் திணைக்களம் வாஷிங்டனில் கடந்த திங்களன்று வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நோர்வே அரசினால் கொழும்பில் நடத்தப்பட்டு வரும் "சிறுவர் பாதுகாப்பு நிலையம்" மீதும் சிங்களத் தீவிரவாதிகளே அண்மையில் குண்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க நோர்வே மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது-என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(க-7)

## டக்ளஸின் ஏற்பாட்டிலேயே குடாநாட்டு ஊரடங்கில் தளர்வு

யாழ்ப்பாணம்,மே7

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா, இராணுவத் தளபதி ஜெனரல் பலகல்ல மற்றும் யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா ஆகியோருடன் பேச்சு நடத்தியதை அடுத்தே யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஊரடங்குச் சட்ட நேரத்தில் தளர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இது வரைகாலமும் இரவு 8 மணிக்கு நடைமுறைக்கு வந்த ஊரடங்கு உத்தரவு, கடந்த வெள்ளிக்கிழமை முதல் இரவு 9 மணிக்கே நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

ஊரடங்கு உத்தரவு தளர்வு குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில்-

யாழ்.மாவட்டத்தில் ஊரடங்கு நிலைமையினால் மக்களுக்கு ஏற்பட்டு வந்த கஷ்டங்களை நான் அறிவேன். 1997, 1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் நிலவி வந்த ஊரடங்கு நிலைமையிலிருந்து இன்றைய நிலைமைக்குக் கொண்டு வந்ததிற்கு ஈ.பி.டி.பியின் முயற்சியே காரணம். தொடரும் சுமுக நிலைமையை அடுத்து ஊரடங்கு நேரத்தில் மேலும் தளர்வு ஏற்படுத்தப்படும் - என்றார். (க)

## 23 சிங்கள மீனவர்களை 2 நாள்களில் காணோம்!

### புலிகள் கடத்தியதாகக் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,மே7

வாழைச்சேனைக்கு வடக்கே 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சியன்கிரனி என்ற பகுதிக் கடற் பிரதேசத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த - தென்பகுதியைச் சேர்ந்த - 23 மீனவர்களை அவர்களது 7 வள்ளங்களுடன் காணவில்லை என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

கடந்த வெள்ளியன்று மீன்பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்ற இவர்கள் நேற்றுமுன்தினம் இரவு வரை வீடு திரும்பவில்லை.

கண்டி, சாலை, கேகாலை,கல்பிட்டிய ஆகிய இடங்களைச் சேர்ந்த சிங்கள மீனவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இவர்களை விடுதலைப் புலிகளே கடத்தினர் என்பதை அவர்களது வானொலித் தொடர்புகளை இடைமறித்துக் கேட்டதன் மூலம் படையினர் உறுதிப்படுத்தியதாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

(ம-6-9)

## சுகாதாரத் தொண்டர்களுக்கு சான்றிதழ்கள்

யாழ்ப்பாணம்,மே7

சுகாதாரப் பயிற்சியைப் பூர்த்தி செய்துள்ள யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் யாழ்நகரில் விரைவில் நடைபெறவுள்ளது. வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பயிற்சியை முடித்த 956 பேருக்கு சான்றிதழ்களை வழங்கவுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பழை, கோப்பாய், யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, சங்கானை ஆகிய ஏழு பிரிவுகளில் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுள்ளது. இப்பயிற்சி வகுப்புகளை யாழ்.மாவட்ட சென்.ஜோன்ஸ் முதலுதவிப் படையினர் அளித்திருந்தனர்.

கடந்த நான்கு வருடங்களாக சுகாதாரத் தொண்டர்களாக சுகாதார மருந்து அதிகாரிகளின் கீழ் பணியாற்றி வரும் இவர்கள், அண்மையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ஈபிடிபியின் யாழ் தலைமைச செயலகத்தில் சந்தித்தபோது தங்களுக்குரிய நிரந்தர நியமனத்தைப் பெற்றுத்தருமாறு கோரியுள்ளனர்.(க)

## ஆசிரியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே7

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆட்சிக் குழுக் கூட்டமும் கருத்தரங்கும் எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் மட்டக்களப்பு விவேகானந்தா மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவிருக்கும் சகல கிளைகளினதும் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், தாய்ச்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருக்கான முன்னுரிமை அடிப்படையில் பிரயாண அனுமதி பெறுவதற்கான ஆலோசனைக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு நல்லூரில் உள்ள சங்கத்தின் தலைமைப் பணிமனையில் நடைபெறவிருப்பதாக சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (ஐ)

## நியமனக் கடிதம் வழங்கும் வைபவம்

சண்டிலிப்பாய்,மே7

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அபிவிருத்தித் தொண்டர்கள் தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் 9-ஆம் திகதி புதன்கிழமை வழங்கப்படும்.

சங்கானையிலுள்ள வலி.மேற்கு பிரதேச செயலர் பணிமனையில் வைத்து வலி.மேற்கு பிதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் இந்த நியமனக் கடிதங்களை கையளிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

நியமனக் கடிதம் பெற்றவர்கள் அன்றைய தினம் தொல்புரம் வழுக்கம்பரை அம்மன் ஆலய சுற்றாடலில் சிரமதானத்தில் ஈடுபடுவார்கள் என்றும் -

எதிர்வரும் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் இப்பகுதியில் பாதீனியம் களை ஒழிப்பிலும் அவர்கள் ஈடுபடுவர் எனவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. அதிபர் திருமதி வில்வலிங்கம் உரையாற்றுகிறார். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சண்முகரட்ணம், க.நடராசா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) தி.ஸ்ரீஸ்கந்தராஜா (இலங்கை வங்கி) ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (ஐ)



நல்லூர் திவ்ய ஜீவன சங்க சிவானந்தர் சிறுவர் பாடசாலை சிறுவர்களின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஏ.வை.தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். விழாவில் சிறுவர்கள் வழங்கிய உடற்பயிற்சியின் ஒரு காட்சியை படத்தில் காணலாம். (ஐ)



உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் க.யோகராசா உரையாற்றுவதையும் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் அ.சி.நடராசா, உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன், உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய அதிபர் க.ஆனந்தராசா ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஐ-1)



கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.தெற்கு பிரதேச திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த.தேவராஜன் போட்டிகளை ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம். அதிபர் க.செல்வக்குமாரன், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தைச் சேர்ந்த க.சிவராசா, விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் வி.பரிபூரணானந்த சர்மா, உப அதிபர் ச.பிரணதார்த்திகர சர்மா, ஈஸ்வரலிங்கம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ஐ-1)

# முதலாம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம்
1924
-
11
-
19

மறைவு
2000
-
04
-
18

## அமரர் கந்தையா நமசிவாயம்

சித்திரை பூரணையே சிராத்த திதியினிலே
இத்தரை வாழ்வகன்ற இனியவெம் தந்தையுரே!
நித்திய மெங்கிலும் நின் வதனம் தேடுகின்றோம்
இத்துயர் நீங்கிடுமோ இருள் தானும் நீங்கிடுமோ?

*கோகுலம்,*
*அல்வாய்.* (87493)

தங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
15
-
08
-
1933

இறப்பு
07
-
04
-
2001

## திருமதி சின்னப்பு பாறுபதி

தாயுள்ளம் கொண்டு தயவுடன் எமைக்காத்து
தூயயன்பாய் கல்வியோடு பொருள்செல்வமும்
தந்து வளர்த்த தாயே! நீங்கள் வந்து
எங்கள் முன் நிற்பது எக்காலம்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*போக்காலை வீதி,*
*உடுப்பிட்டி.* (87384)

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பீட விரிவுரையாளரும்
எமது சங்க உறுப்பினருமான
திரு. கு.திருக்குமரன் அவர்களின்
அன்புச் சகோதரி

## செல்வி எழிலரசி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவர் தம்குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**விவசாய பீட ஊழியர் நலன்புரிச் சங்கம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.** (87440)

# நெஞ்சில் நிறைந்த மூன்றாம் ஆண்டு



தோற்றம்
22
-
06
-
1956

மறைவு
11
-
05
-
1998

## அமரர் சுப்பிரமணியம் தனபாலசிங்கம்

(சந்திரன்)
(உரிமையாளர், அப்பாள் ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி)

திதி:- 07-05-2001

கண்ணியம் மிக்க கணவனாக, பாசமிகு
தந்தையாக, உற்றிடத்துதவும் உறவினனாக
வாழ்ந்து எமது நல்வாழ்வின் வழிகாட்டியாக
இருந்து மறைந்த எங்கள் அன்புத்
தெய்வத்தை வாஞ்சையுடன் நினைவு கூருகின்றோம்.

*பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு.* (87294)

- மனைவி, பிள்ளைகள்,
மைத்துனர்.

## ஊர்காவற்றுறையில் பயிற்சி வகுப்பு

'போரூட்' நிறுவனத்தால் போதைப் பாவனைக்கு எதிரான சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு பயிற்றுநருக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

ஊர்காவற்றுறை போரூட் அலுவலகத்தில் எதிர்வரும் 9,10,11 ஆம் திகதிகளில் இந்தப் பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

சுகவாழ்வு நிலையத்தைச் சேர்ந்த பாலா இந்தப் பயிற்சி வகுப்பை நெறிப்படுத்தியுள்ளார். (க-5)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே7

ஆரம்ப ஆசிரியர் தெரிவில் பாதிகப்பட்ட சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துளள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (க-5)

## நாச்சிக்குடா வாசிகள் இருவரும் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம்,மே7

காங்கேசன்துறை குற்றத்தடுப்பு பொலீஸாரால் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இரு நாச்சிக்குடா வாசிகளையும் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நாச்சிக்குடாவைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை கிறிஸ்ரியன் பிரான்சிஸ் மற்றும் அந்தோனிப்பிள்ளை தேவதாஸ் குறூஸ் ஆகிய இருவருமே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் ஆவர்.

இவர்கள் இருவரும் தமிழகத்தில் இருந்து "குல்லா" ஒன்றில் நாச்சிக்குடாவுக்குப் புறப்பட்ட சமயம் நெடுந்தீவில் கரை ஒதுங்கினர் என்பதும் அவர்களை ஈ.பி.டி.பியினர் ஊர்காவற்றுறை பொலீஸாரிடம் ஒப்படைத்திருந்தனர் என்பதும் தெரிந்ததே. (க-6)

## கடவுச் சீட்டு விண்ணப்பப் படிவம்

யாழ்ப்பாணம்,மே7

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான ஒரு தொகுதி கடவுச் சீட்டு விண்ணப்பப்படிவங்கள் கொழும்பிலிருந்து யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பப் படிவங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக விநியோகிக்கப்படும். (க-5)

## தொண்டர் ஆசிரியர் நேர்முகப்பரீட்சை

வடமராட்சி கிழக்கு, மே7

வடமராட்சி கல்விவலய தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சி வலயத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளன.

நேர்முகப் பரீட்சையில் தோற்றுவோருக்கான கடிதங்கள் அவர்கள் தொண்டா ஆசிரியராகக் கடமையாற்றிய பாடசாலை அதிபர்கள் ஊடாக வலயக்கல்வித் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேர்முகப் பரீட்சையின்போது, தொண்டா ஆசிரியராகக் கடமையாற்றிய பாடசாலையின் அதிபர்கள் பரீட்சார்த்தியின் தொண்டர் ஆசிரியர் சேவையை உறுதிப்படுத்தும் வகையில் தினவரவுப் பதிவேடு, தினவரவு இடாப்பு, பாடப்பதிவேடு, புள்ளிப் பதிவேடு, சம்பளத் திரட்டுப் புத்தகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருப்பின் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டக் குறிப்பு, கோட்டக் கல்விப் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை நேரசூசி ஆகியவற்றுடன் பிரசன்னமாகி இருத்தல் வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது. (ஸ-182-173)


ENGLISH
SPOKEN AND GRAMMAR
BY BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்!
09.05.2001
புதன் 3.30 (பழைய நேரம்)
(கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை அருகில்)
(C/16553)


# அழியா நினைவுடன் ஆண்டொன்று



## திருமதி பத்மாவதி சுப்பிரமணியம்

திதி : சித்திரைப் பூரணை

உருவாய்
02-06-1932

அருவாய்
18-04-2000

நமது ஞாபகங்களில் சுழன்று
செயல்களில் ஊடுருவி
நிஜமான அம்மா!
உங்கள் ஜீவனின் குரலொலியில்
நாங்கள் வாழ்வோம்; நினைப்புடனே.

*'பத்மபதி'*
*முருகேசபண்டிதர் வீதி,*
*சுன்னாகம் தெற்கு.* (87474)

- குடும்பத்தினர்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
22
-
04
-
1934

மறைவு
11
-
05
-
1998

## திருமதி இரத்தினம் சண்முகம்

திதி: 07-05-2001

அன்பின் சிகரமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் இலக்கணமாய்
எமையெல்லாம் வழி நடத்தி வாழ்ந்து காட்டிய
தங்கள் நினைவு உயிர் உள்ள மட்டும்
எம் நெஞ்சை விட்டு நீங்காது!

*97, மருதடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (87466)

- கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
22
-
06
-
19[illegible]

விண்ணில்
27
-
04
-
2000

## திருமதி [illegible]காபரமேஸ்வரி வில்வலிங்கம்

பாசத்தின் உறைவிடமே! எங்கள் அம்மாவே
ஆண்டொன்று கடந்தாலும்
ஆறவில்லை உங்கள் பிரிவுத்துயர்!
எம்மையெல்லாம் பரிதவிக்க விட்டு
எங்கு சென்றீர்கள்?

*[illegible] விநாயகர் கோயிலடி,*
*கரணவாய்,*
*கரவெட்டி.* (87374)

உங்கள் பிரிவால் துயருறும்:
சி.வில்வலிங்கம் (கணவர்),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 6ஆம் மாத நினைவஞ்சலி

பிறப்பு 25 - 09 - 1986



இறப்பு 07 - 12 - 2000

## விக்னேஸ்வரன் திவ்யா

மாதங்கள் ஆறு சென்றதம்மா
மாறா உன் முகம் எமக்கு
ஆறாமல் தேறாமல் சென்றுவிட்டாய்
இனி எப்போ ஆறுவது நாம்
தீராது உன்நினைவு! மாறாது
உன்னுடைய எழில் முகம்
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனிடம் வேண்டுகின்றோம்.

*விக்னேஸ்வரன்,*
*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை.*

- குடும்பத்தினர்.

(C/16582)

# கண்ணீர் அஞ்சலி

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்

## க.நவரத்தினம்

அவர்களின் மரணச் செய்தி அறிந்து மிகவும் கவலை அடைந்தோம். அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாததும் சோஷலிச இயக்கத்துக்குப் பெரும் பின்னடைவுமாகும். அவரின் உற்றார், உறவினர்க்கு எமது ஆறாத்துயரத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். நேரில் சென்று எமது அஞ்சலியைத் தெரிவிக்க முடியாமையைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

*நீர்வேலி மத்தி.*

சி.இராசையா
இளைப்பாறிய தபால் அதிபரும்
குடும்பத்தினரும்.

(87513)

## அணைச் சுவர் நிர்மாணிக்க நிதி ஒதுக்கீடு

சண்டிலிப்பாய்,மே7

கட்டுடை மேலங்காமம் குளத்தின் அணைக்கட்டுச்சுவர் கட்டும் வேலைக்கும் அங்கு பாலம் ஒன்றை நிர்மாணிப்பதற்கும் நீர்பாசனத் திணைக்களம் இரண்டு லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனம் ஒப்பந்த அடிப்படையில் இக் கட்டுமான வேலைகளைப் பொறுப்பேற்றுள்ளது. (க-135)

## விபத்தில் டாக்டர் காயம்

அச்சுவேலி ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியான டாக்டர் மயில்வாகனம் இராசையா (வயது 64) நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயம் அடைந்தார்.

ஊரிக்காடு, நாவலடிப்பகுதியைச் சேர்ந்த அவர் நவாலியில் உள்ள தனது மகள் வீட்டிலிருந்து கடமைக்காக ஆஸ்பத்திரிக்குச் சென்று கொண்டிருந்த சமயமே மானிப்பாய், உடுவில் வீதியில் விபத்துக்குள்ளானார்.

காயமடைந்த டாக்டர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-15)

## தையல் மெஷின் அன்பளிப்பு வைபவம்

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் அமரர் சு.ஸ்ரீபாஸ்கரன் ஞாபகார்த்தமாக பாதிப்புற்ற குடும்பங்களுக்கும், ஆதரவற்ற விதவைகளுக்கும் தையல் இயந்திரங்கள் வழங்கும் வைபவம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக துர்கா தேவஸ்தான தலைவி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும் சிறப்பு விருந்தினர்களாக மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம், வலி.வடக்கு பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயம்போல், வணபிதா ஞானரட்ணம், வலிவடக்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் க.சத்தியசீலன் இளைப்பாறிய நீதிபதி முதிரு நாவுக்கரசு, சட்டத்தரணி மு.சபாநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (க-86)

## இடம்பெயர்ந்த 47 பேருக்கு கொடுப்பனவு

கோண்டாவில்,மே7

நல்லூர் பிரதேச [illegible] பிரிவில் இடம்பெயர்ந்தவர்களில் பதிவு செய்யப்பட்ட 47 பேருக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து இடம்பெயர்ந்த அரியாலை யாழ்ப்பாணம், தென்மராட்சி சேர்ந்தவர்களுககே இக் கொடுப்பனவு கிடைக்கப்பெற்றுள்ளது.

உரியவர்கள் கிராம அலுவலர்களிடம் தொடர்புகொண்டு இக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-86)


# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

2003 A/L
2002 A/L

ENGLISH
BY
MR.T.N.பஞ்சாட்சரம்

ஆரம்பம்:- 08.05.01 செவ்வாய் பி.ப 3.00
(செவ், வியாழன் - 3.00 மணி)

(87512)


# மரண அறிவித்தல்

## அரியகுட்டி முத்துக்குமாரு

(காங்கேசன்துறை உணவுக் களஞ்சிய ஓய்வு பெற்ற காவலாளர்)

கச்சாய் வெளி பளையைப் பிறப்பிடமாகவும் மாலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி முத்துக்குமாரு நேற்று (06.05.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி அரியகுட்டி தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற இராஜலட்சுமியின் அன்புக் கணவரும், பிரபாகரன் (யாழ். இந்துக் கல்லூரி, 2001 கணிதப் பிரிவு மாணவன்), பிரதீபா (பளை மத்திய கல்லூரி, 2002 கலைப்பிரிவு மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தேவி, பூலோகம் (லீலா பிரான்ஸ்), காலஞ்சென்ற மகாலிங்கம், செங்கமலம் (குஞ்சு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சங்கரதாஸ், கதிர்காமநாதன் (பிரான்ஸ்), சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும், ரவீந்திரன், யாழினி, ரவிதாஸ், யசோதினி, கஜினா, தர்மகரன் (தம்பா), கோபிகன், பிருந்தா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.05.2001) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*பிள்ளையார் வளவு,*
*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.*

தகவல்:
M.பிரபாகரன் (மகன்)
*கச்சாய் வெளி, பளை.*

(87508)

இன்றைய நன்னாளில் எம்மை வளர்த்து விட்ட பெருமகனை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.



மலர்வு 1918-01-06 உதிர்வு 1977-11-02

அமரர்
**எம்.வி.ஆசீர்வாதம் J.P அவர்கள்**
(இளைப்பாறிய ஆசிரியர்,
யாழ்.மாவட்ட சமாதான நீதிவான்,
ஸ்தாபகர் - ஆசீர்வாதம் அச்சகம்,
புத்தகசாலை, ஸ்ரோர்ஸ்,
பிரபல நூலாசிரியர், புத்தக வெளியீட்டாளர்,
நாட்டுக் கூத்து ஆசிரியர்,
சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர்)
அன்றும் இன்றும் என்றென்றும்
அவரை மறவோம்.

ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ்,
*61, பெரிய கடை,*
*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

அவர் தம் நிழலில் வளர்ந்தவர்கள்


# மங்களகரமான திறப்பு விழா

## ஆசீர் வணிக நிலையம்

நிகழும் 2001 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் நாள் (07-05-2001) இன்று மதியம் 12.30 மணியளவில்

எம்மால் ஆரம்பிக்கப்படவுள்ள

**ஆசீர் வணிக நிலையம்**

என்னும் ஸ்தாபனத்தை

*தேசிய சேமிப்பு வங்கியின்*

யாழ்.கிளை முகாமையாளர்

**உயர்திரு.**
**மயில்வாகனம் சிவானந்தா**

அவர்கள்

குத்துவிளக்கேற்றித் திறந்து வைப்பார்கள்.

அதனைத் தொடர்ந்து

யாழ்ப்பாணம்

**அற்புதா ரேடிங் கொம்பனி**

உரிமையாளர்

**திரு.சதாசிவம் அற்புததேவராஜா**

அவர்கள்

முதன்மையாக பொருள்களைப் பெற்று வியாபாரத்தை ஆரம்பித்து வைப்பார்கள்.

இவ்விழாவில் எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டுசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

*ஆசீர்வணிக நிலையம்,*
*202 A, கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.*

- உரிமையாளர்கள்.

(87511)


அன்னைக்குக் கடமை செய்யும் சித்திரா பௌர்ணமி நாளான இன்று எனது அன்னையை நினைவு கூருகின்றேன்.



மலர்வு 1914-04-14 உதிர்வு 1990-10-30

**திருமதி**
**சின்னப்பு சூசானம்**

அம்மா!

எத்தனையோ கஷ்டங்கள் மத்தியில் என்னை வளர்த்து ஆளாக்கிய நீங்கள் இன்றைய நன்னாளில் இல்லையே என ஏங்குகிறேன்.

*16/3, கச்சேரி*
*நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

- மகன்

## 'உதயன்' முகாமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவராகச் சேர்ந்து மூன்றாம் பகுதியிலும் சித்தியடைந்து ஒரு கணக்காளரானார்.

முன்னாள் படைவீரர் நிறுவனம், வொலங்கா லிமிட்டெட் ஆகியவற்றில பொறுப்பான பதவிகளில் பணியாற்றிய பின்னர் பெனின் சுலா குறூப் நிறுவனத்தில் பத்து வருடங்கள் முகாமையாளர் பதவியை வகித்தார்.

உதயன் வெளியீட்டகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக சேர்ந்த நந்தகுமார் கடந்த ஆறு ஆண்டு [illegible]ளாக நிர்வாகம் மற்றும் ஆளணிக் [illegible] பொறுப்பான முகாமையாள[illegible] பதவி வகித்தார்.

சிறந்த விளையாட்டு வீரரான [illegible] குடாநாட்டில் சிறந்த கிரிக்கெட் மத்தியஸ்தராக மதிக்கப்பட்டார். யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத் தலைவராகவும், யாழ். றோட்டரிக்கழகத்தில் கழகச்சேவை இயக்குநராகவும் சேவை புரிந்தவர். இவர் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவராவார்.

இவர் காலஞ்சென்ற பிரபல நாடக நடிகரும், "அடங்காப்பிடாரி" போன்ற நாடகங்களின் தயாரிப்பாளரும், யாழ்.மனோகராத் தியேட்டர் முன்னாள் முகாமையாளருமான கனகையாவின் புத்திரராவார்.

இவர் தமது மனைவி [illegible]ரேமா தேவியையும், மகள் [illegible], மகன் நிர்மலன் ஆகியோரையும் விட்டுச் சென்றுள்ளார். (உ)

## கலட்டிப் பகுதியில் கைகலப்பு

யாழ்ப்பாணம்,மே7

யாழ்ப்பாணம் கலட்டிப் பகுதியிலுள்ள மதுபான நிலையம் ஒன்றில் நேற்றிரவு இரு பகுதியினருக்கு இடையில் கைகலப்பு இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இக் கைகலப்பில் தமிழ்க் குழு ஒன்றைச் சேர்ந்தோரும் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-5)


## தாயகம் சிறுவர் இல்லம்

### திறப்பு விழா



பொற்பதி வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள சிறுவர்கள் வாழ்வகமான

## தாயகம்

இன்று காலை 10.30 மணிக்குத் திறந்து வைக்கப்படுகின்றது.

*பிரதம விருந்தினர்:*

**திரு.இ.த.விக்னராஜா** (மாவட்ட நீதிபதி, யாழ்ப்பாணம்)

*கௌரவ விருந்தினர்கள்:*

நல்லை ஆதீன முதல்வர்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள்**
**திரு.பா.சுப்பிரமணியம்** (நீதிபதி, மல்லாகம்)
**திரு.மு.திருநாவுக்கரசு** (பதில் நீதிவான், யாழ்ப்பாணம்)
**திரு.க.அரியநாயகம்** (பதில் நீதிவான், மல்லாகம்)
**திரு.து.வைத்திலிங்கம்** (மேலதிக அரசாங்க அதிபரும், வடக்கு - கிழக்கு மாகாண சபையின் யாழ். மாவட்ட ஆணையாளரும்)
**திரு.ந.சதாசிவஐயர்** (மேலதிக மாவட்டப் பதிவாளர்)

இந்நன்முயற்சிக்கு நேரில் வந்து ஆசியும் வாழ்த்தும் கூறுமாறு ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

'தாயகம்' அமைப்பாளர் எஸ்.வி.சிறிதரன்,
யாழ்ப்பாணம்.
*கொனிகா கலர் லாப் மற்றும் ஸ்ரீ அமலா ஜுவலிலர்ஸ்.*

(C/16590)





## றோட்டறி அமைப்பின்

## கண்ணீர் அஞ்சலி

எமது கழகத்தின்
சிரேஷ்ட உறுப்பினர்களுள் ஒருவரான

## Rtn.க.நந்தகுமார்

அவர்களின்

**அகால மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளோம். அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களை அஞ்சலியாக சமர்ப்பிப்பதோடு, அவரின் பிரிவால் வாடும் அன்னாரின் குடும்பத்துக்கும் உதயன் வெளியீட்டகத்துக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.**

(C/16587) **- யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகம்.**


## 'தாயகம்'....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாங்க அதிபர் து.வைத்திலிங்கம், மேலதிக மாவட்டப் பதிவாளர் ந.சதாசிவஐயர் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

யாழ்.பிரபல வர்த்தகர் எஸ்.வி. ஸ்ரீதரனை அமைப்பாளராகக் கொண்டு இயங்கும் செயற்குழு 'தாயகம்' அமைப்பை நிர்வகிக்கவிருக்கின்றது. (உ)

## யுத்தத்தை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிந்துகொண்டார். அங்கு பிரசன்னமாக இருந்தோரிடமிருந்து ஏகமனதான ஆணையை அவர் பெற்றுக் கொண்டார்.

காலம் குறித்த தாக்குதல் நடவடிக்கை நிறுத்தம், யுத்த நிறுத்தம், மோதல் தவிர்ப்பு என்று என்ன பெயரிட்டாலும் காலவரையறை குறிக்கப்படாத மோதல் நிறுத்தத்தை ஜனாதிபதி விரும்பவில்லை.

ஆயுதப் படைகளின் தலைவர்கள் தங்களின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ள தற்[illegible] [illegible]யில் - அதுவும் குறிப்பாக 'அக்கினி சுவாலை' பின்னடைவின் பின்னணியில் - அநேகமாக அடுத்த ஓரிரு வாரங்களில் கொழும்பு வரக்கூடிய சொல்ஹெய்மின் விஜயத்தை ஜனாதிபதி குமாரதுங்க எதிர்பார்த்திருக்கின்றார்.

இருதரப்பு வீரர்களாலும் தங்களின் தாக்குதல்களை நிறுத்தி வைத்திருக்க -

ஒரு குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டு, தீர்மானம் எடுக்கப்படும் விதத்தில் -

உத்தேசப் பேச்சுக்களில் முக்கிய முன்னேற்றத்தைக் காணக்கூடியதாக இருக்கலாம்.

ஆனால் -

இது செயலுருப்பெறுவதற்கு முன்னான நாள்கள் சந்தேகமின்றி முக்கியமானவை.

புலி கெரில்லாக்கள் திருப்பித் தாக்கலாம் - அக்கினிச்சுவாலை நடவடிக்கைக்கு அவர்களது பதிலாக -

பாதுகாப்புப் படையினரைப் பொறுத்தவரை அது ஒன்று மட்டும்தான் அவர்களுக்கு முக்கியமானது என்பதல்ல.

அதிலும் விடப் பெரிய பொறுப்பு அவர்களுக்கு உள்ளது.

உத்தேச பேச்சு இடம்பெறுவதற்கு முன்னர் புலிகளின் 'இமேஜ்' அல்லது பேரம் பேசும் வலு அதிகரிக்கக் கூடியதான மேலும் இழப்புகள் தங்களுக்கு ஏற்படாமல் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே அது.

- இப்படி அவர் தெரிவித்துள்ளார். (உ)


**எமது புதிய வீடியோ CD வெளியீடு**

ஜெயராம், சுரேஸ்கோபி, செந்தில், மனோரம்மா நடித்த

**நண்பனே**

பிரதிகள் உடன் பெறலாம்.

**வீடியோ விமல்**

(C/16594) யாழ்ப்பாணம்.



## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை - கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

*வேலணை*
*வைத்திய கலாநிதி*
**சி.இராசரத்தினம்,**
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459

(87507)


## ஆறாத் துயரோடு அஞ்சலி



### எம் 'நந்தா' விளக்கு!

அதிகார மிடுக்கின்றி
அமைதியுடனும் பரிவுடனும்
அனைவரையும் அரவணைத்து
புன்சிரிப்பு எனும் அருமருந்தால்
பிணக்கு எனும் பிணி தீர்த்த
அன்புருவே! அண்ணலே!
கணப்பொழுதில் மறைந்ததேனோ?
மீகாமன் இல்லாமல்
மிகுதுயரில் மூழ்குகின்றோம்
ஆற்றாமல் உங்களுக்கு
அழுதழுது அஞ்சலிகள்!

*'உதயன்' ஊழியர்கள்.*


## கண்ணீர் அஞ்சலி



'உதயன' நிறுவன
நிர்வாக முகாமையாளரும்
எமது நண்பருமான

## கனகையா நந்தகுமார்

நேற்று அகால மரணமான செய்திகேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

அன்னாரின் மறைவால் துயருறும் அவரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(C/16592)

வி.எஸ்.பி.குறூப்,
ஜெசிபா ஏஜென்ஸீ.


## மரண அறிவித்தல்

## கனகையா நந்தகுமார்

(உதயன் நிறுவன முகாமையாளர்)

நல்லூர் தெற்கு, முதலியார் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கனகையா நந்தகுமார் (நிர்வாக முகாமையாளர் - உதயன் நிறுவனம்) நேற்று அகால மரணமானார்.

அன்னார் பிரேமாதேவியின் அன்புக் கணவரும் லக்சுமி (லண்டன்), நிர்மலன் (ஹற்றன் நஷனல் வங்கி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஷ்ணகுமார் (மாநகரசபை - யாழ்ப்பாணம்), சூரியகுமார் (கனடா), ஜயந்திமாலா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாமகள்தேவி, சரஸ்வதி, ஸ்ரீகணநாதன், திரு.திரு மதி தண்டாயுதபாணி, சாந்தா, திரு.திருமதி பாலகாந்தன், திரு.திரு மதி மனோஸ்காந்தன் ஆகியோரின் மைத்துனரும், செந்தூரன், பிரியதர்ஷினி ஆகியோரின் பெரிய தகப்பனாரும் கனன், ஜனன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08-05-2001) செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*37, முதலியார் வீதி,*
*நல்லூர் தெற்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:-
மனைவி.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் (07.05.2001) இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.